விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valamburii

பக்கங்கள்:- பத்து


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத் சீமெந்து தில் முதலாம்தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.


சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | புரட்டாதி 01 | வெள்ளிக்கிழமை | (17.09.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 273

# ஆயுதக் குழுக்கள் வெளியேற்றப்படாவிடின் சமாதான முயற்சிகள் பெரிதும் பாதிப்படையும்



## சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டு



(கிளிநொச்சி)

இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையின் முதலாவது அத்தியாயத்தின் எட்டாவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தற்கமைய வடக்குக் கிழக்கில் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டுவரும் ஆயுதக் குழுக்களைத் தடுத்து நிறுத்தி அவர்களை வெளியேற்றினால்தான் யுத்தநிறுத்த சூழலைப் பேணமுடியும் என்று நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை நேற்றுக் கிளிநொச்சியில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபின் ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசும்போதே தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் தாமதமடைய புலிகளே காரணம்

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க புலிகள் உடனடியாக முன்வரவேண்டும்



## எரிக் சொல்ஹெய்மிடம் ஜனாதிபதி வலியுறுத்து

(நமது நிருபர்)

**சமாதான முயற்சிகள் காலங்கடந்து செல்வதற்கு தமிழீழ விடுதலைப் புலிகளே காரணம். சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் உடனடியாக முன்வரவேண்டும். இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கிறார்**

நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடனான சந்திப்பிலேயே ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

நேற்றுக்காலை கிளிநொச்சிக்குச் சென்ற எரிக் சொல்ஹெய்ம் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இச்சந்திப்பில் விடுதலைப் புலிகளால் வலியுறுத்தப்பட்ட விடயங்களையும், விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகளையும் எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதிக்கு விளக்கிக் கூறினார். இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையினால் நாட்டில் அமைதி நிலவுகிறது. இந்த அமைதிச்சூழ

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அஷ்ரப் நினைவாக துக்கம் அனுஷ்டிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகர் தலைவர் மறைந்த எம்.எச்.எம். அஷ்ரப் நினைவாக நேற்றுக் கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்களில் பூரண துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டு கொழும்பிலிருந்து அம்பாறைக்கு ஹெலிகொப்டரில் பயணம் செய்துகொண்டிருந்த சமயம் மாவனல்லையில் இடம்பெற்ற விபத்தில் அவர் உட்பட எட்டுப்பேர் அகால மரணமடைந்தார்கள். அவர்களின் நாலாவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி, தேசிய முஸ்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நவம்பர் மாதம் முதல் மின்கட்டணம் அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் மின்கட்டணம் 5 வீதத்தினால் அதிகரிக்கப்படவுள்ளதாக இலங்கை மின்சாரசபை அறிவித்துள்ளது.

இந்த மின்கட்டண அதிகரிப்பு ஜனாதிபதியின் ஆலோசனையுடனேயே அமுல்படுத்தப்படவுள்ளதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

5 வீத மின்கட்டண அதிகரிப்பில் வீட்டுப் பாவனையாளர்களுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளபோதும், 90 அலகுகளுக்கு மேல் பாவிப்பவர்களுக்கு அதாவது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான பேச்சு ஆரம்பித்து இரண்டு ஆண்டுகள் பூர்த்தி!

(நமது நிருபர்)

இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் நேற்றுடன் இரண்டு ஆண்டுகள் பூர்த்தியடைந்து, இன்று மூன்றாம் ஆண்டில் காலடி எடுத்துவைத்துள்ளது.

நோர்வே அரசின் அனுசரணையுடன் 2002 ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்த ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியின்போது அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான முதற்கட்டப் பேச்சுக்கள் தாய்லாந்தில் சட்டாஹிப் துறைமுகத்தில் செப்ரெம்பர் 16 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை இரண்டு தினங்கள் நடைபெற்றன.

இரண்டாம் சுற்றுப்பேச்சுகள் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கில் இருந்து 30 கிலோமீற்றர் தொலைவிலுள்ள நகோன் பத்தோம் நகரிலுள்ள ரோஸ் காட்டன் ரிகோர்ட் ஹொட்டலில் ஒக்டோபர் 31 ஆம் திகதி முதல் (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கக்குழு யாழ். வருகிறது

(யாழ்ப்பாணம்)

அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குழுவொன்று எதிர்வரும் 20ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இலங்கையில் வசிக்கும் அமெரிக்கப் பிரஜைகளைச் சந்திக்கும் அமெரிக்கத் தூதரக முயற்சியின் ஒரு கட்டமாகவே அவர்கள் யாழ். வரவுள்ளனர்.

அரசாங்க அதிகாரிகளைச் சந்திப்பதுடன், அமெரிக்கப் பிரஜைகளைச் மக்கள் சந்திப்பதற்கு வாய்ப்பளிப்பதுவுமே

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குமுதினிப் படகுசேவை இன்று ஆரம்பம்

குறிகாட்டுவானுக்கும், நெடுந்தீவுக்குமிடையிலான குமுதினி படகு சேவை இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் பழுதான நிலையில் ஊர்காவற்றுறை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த குமுதினிப்படகு, திருத்தப்பட்டு இன்றிலிருந்து தனது சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

நேற்றுக் காலை ஊர்காவற்றுறையிலிருந்து புறப்பட்ட குமுதினிப் படகு நயினாதீவைச் சென்றடைந்தது. அங்கு நயினாதீவு

(10 ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தம் தொடர்ந்து நடந்திருக்குமாயின் 20 ஆயிரம் உயிர்கள் பலியாகியிருக்கும்

## கிளிநொச்சியில் எரிக் சொல்ஹெய்ம் விபரிப்பு

(கிளிநொச்சி)

இலங்கை அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட யுத்த நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கை காரணமாக ஒன்றுபட்ட சமாதான சூழலில் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளதாக நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கு நேற்று விஜயம்செய்த நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின் ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர்கள் மத்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட பின் சுமார் மூன்று வருடகால சமாதானச் சூழலில் 200 தொடக்கம் 300 வரையான

(10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அரசும் விடுதலைப்புலிகளும் விரைவில் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்

## வாசுதேவ நாணயக்கார வலியுறுத்து

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் உடனடியாக பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என



ஜனநாயக இடதுசாரி முன்னணியின் செயலர் வாசுதேவ நாணயக்கார வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் உள்காவற்றுறையில் முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் கொல்லப்பட்டமை தொடர்பில் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ள அவர், தமிழீழ விடுதலைப்புலிகள் இந்த கொலையை செய்தமைக்கான ஆதாரம் எதுவும் இல்லாத போதும், தற்போதைய சூழ்நிலையை கருததிற் கொண்டு அவர்களின் மீதே அந்தக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதேபோலவே, தமிழீழ விடுதலைப் புலிகள் கொல்லப்படும் போது அது தொடர்பான குற்றச்சாட்டு இராணுவத் தரப்பின் மீது சுமத்தப்படுகிறது.

சிங்கள மேலாதிக்கம் மற்றும ஒற்றையாட்சியின் கீழ் இவ்வாறான நிலைமையை மாற்ற முடியாது என்றும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (ஈ-121)

## இந்திய கடற்படை யுத்தக்கப்பல் கொழும்புத துறைமுகத்துக்கு வருகை

(கொழும்பு)

ஐ.என்.எஸ்.கங்கா எனப்படும் இந்திய கடற்படையின் பாரிய யுத்தக்கப்பல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்தது.

130மீற்றர் நீளமுடையதும் சுமார் 300பணியாளர்களைக் கொண்டதுமான இந்த யுத்தக்கப்பல் வான் தாக்குதல், ஆழ்கடல் வழித்தாக்குதல் மற்றும் கடல்வழி எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான வசதிகள் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இந்தியக் கடற்படைத்தளபதி அட்மிரல் சுருண் இலங்கை விஜயத்தைத் தொடர்ந்து இந்தக் கப்பல் கொழும்புத்துறைமுகத்தை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(த-121)

## புலிகளின் குரல் சேவை நீடிப்பு

(கிளிநொச்சி)

தியாகி லெப் கேணல் திலீபனின் 17 வது ஆண்டு நினைவு நாளையொட்டி நேற்று முன் தினம் முதல் எதிர் வரும் 26 ஆம் திகதி வரை புலிகளின் குரல் வானொலி தனது காலை ஒலிபரப்பை நீடித்திருப்பதுடன் சிறப்பு நிகழ்ச்சிகளையும் ஒலி பரப்பத் தீர்மானித்துள்ளது.

(ம)


சிறுவிளம்பரம்

SPOKEN ENGLISH

மிகக் குறுகிய காலத்திற்குள் எளிதில் ஆங்கிலம் பேசக் கூடிய வகையில் மாணவர்கள் உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிநாடு செல்லுபவர்களுக்கு செவ்வாய், வியாழன ஆகிய நாட்களில் காலை 7-8 வரை கற்பிக்கப்படுகிறது. K சோமசுந்தரம், சந்தை ஒழுங்கை அம்மன் வீதி சந்தி, சுதுமலை வடக்கு, மானிப்பாய். (8794)


## அமைச்சிலிருந்து விலக்கப்பட்டமை குறித்து அறிவிக்கப்படவில்லையாம்


(கொழும்பு)

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுப் பதவியிலிருந்து தம்மை விலக்கியமை தொடர்பாக இதுவரை உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதுவும தமக்குக் கிடைக்கவில்லை என முன்னாள் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் சி.வி.ரத்னாயக்கா தெரிவித்துள்ளார்.

அவ்வாறு உத்தியோக பூர்வமான அறிவிப்புத் தமக்கு கிடைத்தவுடன் அமைச்சுப்பதவியில் இருந்து விலகி உத்தியோகபூர்வமாக அனைத்தையும் கையளிக்கத் தயார் எனவும் அவர் கூறியியுள்ளார்.

இதேவேளை; க.பொ.த.உயர் தரப்பரீட்சையில சித்தியடைந்த மலையக இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்காக கோரப்பட்ட விண்ணபங்களில் தகுதியானவர்களின் விபரங்கள் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

(க-60)



மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கடந்த ஒருவருட காலமாக சத்திரசிகிச்சை நிபுணராகக் கடமையாற்றிய வரோனிக் தமது சேவையை முடித்துக்கொண்டு சொந்த நாட்டிற்கு திரும்புகிறார். அவருக்கு சத்திரசிகிச்சைக் கூட்டத்தால் நடாத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் சத்திரசிகிச்சை பொறுப்பு தாதி வரோனிக்கிற்கு அன்பளிப்பொன்றை வழங்குவதைப் படத்தில் காண்க.

(படம்:-மருதங்கேணி நிருபர்)

## வட-கிழக்கில் 2707 பேருக்கு டிசம்பரில் எழுதுவினைஞர் நியமனம்

(கொழும்பு)

எதிர்வரும் டிசம்பர் மாதம முதலாம் திகதி 2ஆயிரத்து 707பேருக்கு எழுதுவினைஞர்களுக்கான அரச நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக ஒன்றினைந்த அரசசேவையின் பணிப்பாளர் ஜயம்பதி ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார்.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 20ஆம் திகதியிலிருந்து அடுத்தமாதம 9ஆம் திகதி வரை நடைபெறும் எனக்குறிப்பிட்ட அவர், நேர்முகப் பரீட்சைக்குத் தகுதியானவர்களுக்கு தனிப்பட்ட ரீதியில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த 2002ஆம் ஆண்டு இடம்பெற்ற எழுதுவினைஞர்களுக்கான போட்டிப் பரீட்சைக்கு சுமார் 3இலட்சத்து 50ஆயிரம் பேர் தோற்றினர். இவர்களில் 15ஆயிரம் பேர் சித்தியடைந்துள்ளனர்.

அரச துறையில் 4ஆயிரம் வெற்றிடங்கள் நிலவுகின்ற போதும் முதல்கட்டமாக 2ஆயிரத்து707 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. இதற்கான நேர்முகப் பரீட்சைகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசதிலும் நடைபெறவுள்ளன. இதற்கு அவர்கள் எந்தவித இடையூறும் ஏற்படுத்த மாட்டார்கள் என்றே நான் நம்புகின்றேன் என பணிப்பாளர் ஜயம்பதி ஹெட்டியாராய்ச்சி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் 126பேருக்கு எழுதுவினைஞர்களுக்கான நியமனங்களும், 205 பேருக்கு கணக்குப் பதிவாளர் நியமனங்களும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன், வவுனியா மாவட்டத்தில் 123எழுதுவினைஞர்கள், 195 கணக்குப் பதிவாளர்கள், மன்னாரில் 118எழுதுவினைஞர்கள், முலலைத்தீவு மாவட்டத்தில் 121எழுதுவினைஞர்கள், 199கணக்குப பதிவாளர்கள், திருகோணமலை மாவட்டத்தில் 125எழுதுவினைஞர்கள், 189கணககுப பதிவாளாகளும நியமனம் செய்யப்படவுள்ளனர். மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 125 எழுதுவினைஞர்கள், 20கணக்குப் பதிவாளர்கள், அம்பாறை மாவட்டத்தில் 131எழுதுவினைஞர்கள், 198கணக்குப் பதிவாளர்கள், புத்தளம் மாவட்டத்தில் 135எழுதுவினைஞர்கள், 205கணக்குப் பதிவாளர்கள், கிளிநொச்சி மாவட்டத்தில் 119எழுதுவினைஞர்கள், 192 கணக்குப் பதிவாளர்களும் மேற்படி நியமனஙகளைப் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(க)

## தெளிவற்ற முகவரிகளால் 60,000 கடிதங்கள் தேக்கம்

(கொழும்பு).

தெளிவான முகவரிகள் எழுதப்படாத காரணத்தினால் சுமார் 60ஆயிரம் கடிதங்கள் தபால் நிலையங்களில் தேங்கிக் கிடப்பதாக தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி தபால்மா அதிபர் சேர்வின் சேனாதீர கருத்துத் தெரிவிக்கையில்,

தபால் மூலம் கடிதங்களை அனுபுவோர் அவை சேரவேண்டிய முகவரிகளையும் தமது முகவரிகளையும் தெளிவான முறையில் தபால் உறைகளில் குறிப்பிடாதமையினால் மாதாந்தம் சுமார் 500கடிதங்கள் விநியோகிக்க முடியாது தபால்நிலையங்களில் தேங்கிக் கிடக்கின்றன.

எனவே, கடிதங்களை அனுப்புவோர் அனைத்து முகவரிகளையும் தவறாது குறிபபிடுவதுடன் முகவரிகளைத் தெளிவாகவும் எழுதவேண்டும்.

இதேவேளை, கொழும்பு மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்திற்கு இவ்வாறான கடிதங்கள் எடுத்துவரப்பட்டு அவற்றின் இரகசியத்தன்மை பாதுகாக்கப்பட்ட வண்ணம் பரீட்சிக்கப்பட்டு வருவதுடன் அவை சேரவேண்டிய இடங்களுக்கான முகவரிகளைக் கண்டறியும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவிததார். (க)



கரவெட்டி விக்னேஸ்வராக்கல்லூரியின் பரிசளிப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம், அதிபர் வி.சிவசிதம்பரம் தலைமையிலான பாடசாலைச் சமூகத்தினரால் வரவேற்கப்படுவதைப் படத்தில் காணலாம்.

(படம்:பரு.நிருபர்)

## அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணம் மற்றும் மலையகம் உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் இயங்கும் ஆயிரத்து 40 அறநெறிப்பாடசாலைகளில் கடமையாற்றும் 3 ஆயிரத்து 750ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க இந்து கலாசார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக இந்து சமய கலாசார திணைக்களத்தின் பணிப்பாளர் சி.தெய்வநாயகம் தெரிவித்துள்ளார்.

இவைதவிர அறநெறிப்பாடசாலை மாணவர்களைக் காப்புறுதித் திட்டத்தில் இணைத்துக் கொளவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கு இசைக்கருவிகள், உசாத்துணை நூல்கள் மற்றும் இதர வசதிகளும் செய்சு கொடுக்கப்படவள்ளகாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்குவதற்கென வருடாந்தம் ஒருகோடி ரூபா நிதியை அரசு ஒதுக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(க)


## பொதுமக்களைப் பாதுகாக்கும் திட்டம் மீண்டும் அமுல்

(கொழும்பு)

போதைப்பொருள் பாவனை மற்றும் தற்கொலைக்கு வழிவகுக்கும் காரணிகளிலிருந்து பொதுமக்களைப் பாதுகாத்துக்கொள்வதற்கான செயல்திட்டம் ஒன்று மீண்டும் அமுலுக்குவரவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இவவாறான செயல்திட்டம் ஒன்று முன்னாள் செயற்படுத்தப்பட்டு வந்ததாகச் சுட்டிக்காட்டிய அவர், தவிர்க்க முடியாத சில காரணங்களால் அத்திட்டத்தை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த முடியாதிருந்ததாகவும் தெரிவித்தார்.

2008ஆம் ஆண்டுவரை நடைமுறைப்படுத்தப்படவுள்ள இந்தத திட்டத்தின் மூலம் போதைப்பொருள பாவனை மற்றும் தற்கொலை என்பவற்றில் ஈடுபடமுனையும மக்களைப் பாதுகாககலாம் எனத் தெரிவித்தார் (க6)



புலோலி கிராமிய விழிப்புக்குழுக்கூட்டத்தில் பருத்தித்துறை பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் எஸ்.சீலன் விழிப்புக்குழுவின் செயற்பாடுகள் பற்றி விளக்கமளிப்பதையும், இதில் பருத்தித்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டி.பிரேமரட்ண, தலைமைக்காரியலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் கே.சி.விறப்பு ஆராய்ச்சி மற்றும் கிராம சேவை அலுவலர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

## இன்று ஒரு தகவல்

# நல்லவர் யார்?

ஒரே ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவர் கொஞ்சம் வித்தியாசமான ராஜா. எந்த வகையில் வித்தியாசமானவர் என்று கேட்டால் மக்களிடம் வரி வசூலிப்பதில் கொஞ்சம் வித்தியாசமானவர். மற்றைய மன்னர்கள் போல இவர் நேரடியாக வரி வசூல் செய்வதில்லை. கொஞ்சம் மறைமுகமாக அதைச் செயவார்.

அதாவது ஒவ்வொரு குடிமக்களுக்கும் மாதம் ஒரு மூடை நெல் கொடுப்பார். அரண்மனையிலிருந்து ஒவ்வொரு வீட்டுக்கும் நெல் வந்து சேரும். அந்த ஒரு மூடை நெல்லை இவர்கள் வாங்கிக் கொண்டு அதற்குப் பதிலாக ஒரு மூடை அரிசியை ராஜாவுக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டும். இது தான் அந்த ஊரின் வழக்கம். ராஜா மக்களுக்கு நெல்லைக் கொடுத்து விட்டு அதற்குப் பதிலாக அதே அளவு அரிசியைத் திருப்பி வாங்கிக் கொள்வார். இதைத் தவிர வரி ஏதும் வசூல் செய்வதில்லை.

இதனை மேலோட்டமாகப் பார்க்கும் போது சாதாரணமாகத் தெரிந்தாலும் குடிமக்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். ராஜா கொடுக்கும் நெல்லையும் அரிசியாக்க வேண்டும். அத்துடன் இன்னும் பாதி அரிசியை இவர்கள் சேர்த்துக் கொடுக்க வேண்டும். என்ன செய்வது? மக்கள் ராஜா வைத் திட்ட ஆரம்பித்தார்கள். இந்த ராஜா எப்போது சாவார் என்று எதிர்பார்க்க ஆரம்பித்து விட்டார்கள். பல பேர் அந்த ஊரைக் காலி செய்து விட்டு வெளியூர்களுக்குப் போய்விட்டார்கள்.

மக்கள் எதிர்பார்த்த மாதிரியே நடந்தது. அந்த மன்னன் வந்து படுத்த படுக்கையாகி விட்டான். ராஜா இப்படி சாகக் கிடப்பதாக அறிந்தும் மக்கள் யாரும் பார்க்க வரவில்லை. "ஏன என்னை யாரும் பார்க்க வரவில்லை?" என்று மந்திரியிடம் கேட்டார். "நமது ஊரில் எங்கே மக்கள் இருக்கிறார்கள் பார்க்க வருவதற்கு?" என்றார் மந்திரி. "ஏன் அவர்களுக்கு என்னாயிற்று?" என்று கேட்டார். அமைச்சர் அரசனுக்கு அவர் செய்த தவறைச் சுட்டிக் காட்டினார். மக்களுக்கு இழைத்த கொடுமையை எடுத்துச் சொல்லிப் புரியவைத்தார்.

மன்னருக்கு ஞானோதயம் வந்தது. செய்த பாவங்களை எண்ணி வருத்தப்பட்டான். மெதுவாக அமைச்சரிடம் திரும்பி "எங்கே என் மகன்?" என்று கேட்டான். அவர் எங்கேயாவது ஊர்சுற்றிக் கொண்டிருப்பார் சூதாட்ட விடுதிகளில் கிடப்பார் என்றார் அமைச்சர். "அவன் எங்கேயிருந்தாலும் உடனே அழைத்துக் கொண்டு வாருங்கள் " என்று உத்தரவிட்டார் ராஜா. அடுத்த நாளே இளவரசனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். "தந்தையே என்ன செய்ய வேண்டும் நான்? சொல்லுங்கள்" என்றார். அவர் சொன்னார் "மகனே மக்களுக்கு நான் பொல்லாதவனாகி விட்டேன் அவர்கள் எல்லோரும் என்னை நல்லவன் என்று கூற வேண்டும். அப்படி அவர்களைச் சொல்ல வைக்க வேண்டியது உனது பொறுப்பு" என்றார்.தந்தையே நீங்கள் கவலைப்படாதீர்கள் உங்களை மிகமிக நல்லவர் என்று மக்கள் சொல்லும்படி வைக்கிறேன் என்றான். மகன் அதன பின் கொஞ்சநாளில் மகன் பட்டத்துக்கு வந்தான். வரி வசூல் செய்யும் முயற்சியில் ஒரு மாற்றத்தை உருவாக்கினான். ஒவ்வொரு வட்டுக்கும்ஒரு மூடை உமியைக் கொடுத்து விட்டு அதற்குப் பதிலாக ஒரு மூடை அரிசியை வாங்கினான். அப்பா நெல்லைக் கொடுத்து அரிசி வாங்கினார். இவன் உமி கொடுத்து விட்டு அரிசி வாங்கினான்.

சில நாட்கள் கழிந்ததும் ஒருநாள் மந்திரியைக் கூப்பிட்டுக் கேட்டான். "அமைச்சரே மக்கள் என்ன பேசிக் கொள்கின்றனர்?" என்று. "உங்கள் அப்பா மிகமிக நல்லவர் என்று பேசிக் கொள்கின்றனர்" என்றார் மந்திரி. இது எப்படி இருக்கிறது பாருங்கள் அப்பாவுக்குக் கொடுத்த வாக்கை மகன் காப்பாற்றி விட்டான் இந்தக் காலத்திலும் இது போல அப்பாவுக்கு உதவும் பிள்ளைகள் உள்ளனா.

ஒரு மகன்சொன்னான் "நான் எங்கள் அப்பாவுக்கு மிகவும் உதவியாக இருக்கிறேன்" என்றான். "அப்படியா? உங்கள் அப்பா என்ன செய்கிறார்?" என்று கேட்டேன். "சும்மா இருக்கிறார்" என்றான் அவன்.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# கூட்டமைப்பினுள் பெரும் குழறுபடி கையறு நிலையிலேயே ஜனாதிபதி

## சி.கா. செந்திவேல் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

தற்போது ஆட்சிப் பீடத்தில் உள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பதவியேற்று நான்கு மாதங்கள் கடந்து விட்டன. ஆனால் நாட்டில் உள்ள மக்கள் அனைவரும் ஒவ்வொரு இரவும் நித்திரைக்குச் செல்லும் போது இரண்டு விடயங்கள் பற்றிய ஏக்கத்துடனும் அச்சத்துடனுமே இரவைக் கழிக்கின்றனர்.

ஒன்று வேகமாக நாளாந்தம் அதிகரித்துச் செல்லும் வாழக்கைச் செலவு, இரண்டாவது மீண்டும் யுத்தம் வெடித்து விடுமோ என்ற அம்சமாகும். இந்நிலையில் தான இந்நாட்டின் பொருளாதார அரசியல் நடப்புக்களை இன்றைய அரசாங்கம் வழி நடாத்திச் செல்கின்றது. இவற்றைப் பற்றிய சரியானதும் தூரநோக்குடனானு அரசியல விழிப்புணர்வும், தட்டிக் கேட்கும் வெகுஜனப் போராட்ட ஒன்றிணைவும் ஏற்படாது விட்டால் முழு நாடும் அபாயங்களையும் அழிவுகளையுமே சந்திக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகும்.

இவவாறு புதிய ஜனநாயக கட்சி தெஹிவளை, கல்கிசை மாநகரசபை ஜெயசிங்க மண்டபத்தில் நடாத்திய அரசியல் கருத்தரங்கில் உரையாற்றிய அக்கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் கூறினார்.

சடடத்தரணியும் கட்சியின் அரசியல் குழு உறுப்பினருமான யே. தேவராஜாவின் தலைமையில் நடைபெற்ற மேற்படி கருத்தரஙகில் செந்திவேல் தொடர்ந்தும் உரையாற்றும்போது,

அரசாங்கம் விடுதலைப்புலிகள் இயக்கத்துடனான பேச்சுவார்த்தை என்பது தொடங்கப்படுவதற்கான ஒரு சிறு புள்ளி ஆரம்பத்தைக் கூடக் காண முடியவில்லை. ஜனாதிபதி புலிகளுடன் பேசப்போவதாகவும், எக்காரணம் கொண்டும் யுத்தத்திற்கு செல்வதில்லையென்றும் மீண்டும் மீண்டும் கூறி வருகிறாரே தவிர அதற்கான அர்த்தமுள்ள எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதாகத் தெரியவில்லை.

தமது சொந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்க கட்சிகளுக்குள் பேச்சுவார்த்தை பற்றிய ஒருமுக நிலைப்பாட்டை எடுக்க முடியாத கையறு நிலையிலேயே ஜனாதிபதி இருந்து வருகின்றார். தேசிய ஆலோசனைச் சபை ஒன்றை உருவாக்கப் போவதாக அவர் கதைகள் பேசி வருகிறார்.இவை காலத்தை இழுத்தடித்துச் செல்வதற்கான உத்தி முறையே அன்றி உருப்படியான செயற்பாட்டிற்கான ஆலோசனைகள் அல்ல.

இந்த விடயத்தில் ஐக்கிய தேசியக் கட்சி நேர்மையுடனும் மனப்பூர்வமாகவும் பேச்சுவார்த்தை பற்றிப் பேசுவது போனறு காட்டிக்கொள்ள விரும்புகிறது. ஆனால், அதனபடி அதன் அடி மனதில் ஊறியிருப்பது தேசிய இனப்பிரச்சினையைத தீர்ப்பது பற்றிய அக்கறையல்ல. பதிலுக்கு இன்றைய பேச்சுவார்த்தை முட்டுக்கட்டை நிலையைத தனது எதிர்கால ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் பாதைக்கு எவ்வாறு பயன்படுத்துவது என்பதிலேயே கண்ணாக இருந்து வருகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் முழுக்கவனமும் அடுத்து வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலிலேயே பதிந்து நிற்கின்றது. அதற்கான வியூகங்களை அமைப்பதிலும் அதற்குரிய காய்களை நகர்த்துவதிலுமே அக்கட்சி ஈடுபட்டு வருகிறது.

அவவாறே ஆட்சியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி தெற்கில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் படிப்படியாக விழுங்கி தானே பௌத்த சிங்கள மக்களின் தேசிய அபிலாஷைகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் மற்றொரு பேரினவாதக் கட்சியாகிக் கொள்வதிலும் அதன் ஊடாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் தூரநோக்குடனும் செயற்பட்டு வருகின்றது. அதன் காரணமாகவே பேச்சுவார்த்தையைத் தீவிரமாக எதிர்ப்பதிலும் புலிகளின் இடைக்கால நிர்வாக யோசனைகளை நிராகரிப்பதிலும் முன் நிற்கின்றது எனக் குறிப்பிட்டார். (ற)

# அடிப்படை வசதிகளற்ற நிலையில் புங்குடுதீவு மக்கள் பெரும் அவலம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் கல்வி, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் வீதி என்பன மிகவும் மோசமான நிலையில் இருந்து வருவதால் அங்கு வாழ்கின்ற பொதுமக்கள் பெரும் சிரமங்களை அன்றாடம் எதிர்நோக்கியுள்ளனர்.

இதுகுறித்து புங்குடுதீவில் இயங்கிவரும் வட இலங்கை சர்வோதய நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் செல்வி. பி.ஜமுனாதேவி கருத்துத் தெரிவிக்கையில்,

புங்குடுதீவு பிரதேசத்தில் இடம்பெயர்வுக்கு முன்னர் 25ஆயிரம் பேர் வாழ்ந்தனர். ஆயினும், இப்போது 5ஆயிரம் பேர் மட்டுமே வாழ்கின்றனர். இங்கு முன்பு 15 பாடசாலைகள் இயஙகி வந்தன. இப்போது 5 பாடசாலைகள் மட்டுமே இயங்குவதால், அங்குள்ள மாணவர்கள் தமது கல்வியை முழுமையாகவும், திருப்திகரமாகவும் பெறமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இங்கு இயங்கிய அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர் இப்போது கடமையில் இல்லாதமையினால் பொதுமக்கள் தமது மருத்துவ தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதில் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இஙகுள்ள பிரதான வீதிகள் மற்றும் உப வீதிகள் யாவும் நீண்டகாலமாக திருத்தம் செய்யப்படாமல் இருக்கின்றன. இதன் காரணமாக போக்குவரத்துச் சேவைகள் நடாத்தபபடுவதில் சிரமங்கள் எதிர்நோக்கப்பட்டு வருகின்றன. இதனால் புங்குடுதீவு மக்கள் அங்கிருந்து சுலபமாகப் பிரயாணங்களை மேற்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இது இவ்விதமிருக்க, புங்குடுதீவில் இடம்பெற்ற வன்செயல்கள் மற்றும் யுத்த அனர்த்தங்கள் காரணமாக 80 சிறுவர்கள் தமது தநதையர் அல்லது தாய்மாரை இழந்த நிலையில் இருப்பதாகவும் தெரியவருகிறது எனக் குறிப்பிட்டார்.

இந்த நிலையில், புங்குடுதீவு பிரதேசத்தினை அனைத்து வழிகளிலும் அபிவிருத்தி செய்வதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கு வட இலங்கை சர்வோதய நிர்வனம் முன் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(க-16)

## இராசி பலன்

**17.09.2004**

**(புரட்டாதி 01 வெள்ளிக்கிழமை)**

**திருதியை மாலை 6.33வரை**

**சித்திரை முன்னிரவு 6.36 வரை**

**இராகு காலம் 10.33-12.03 மணிவரை**

**சுப நேரம் 6.03 - 7.33 மணிவரை**

**மேடம்**
நண்பர் சந்திப்பு, காரிய அனுகூலம், பெருமை, சௌபாக்கியம்.

**இடபம்**
புதிய சிந்தை, தொழிலில் ஆர்வம், கருமம் கைகூடும், மன மகிழ்ச்சி.

**மிதுனம்**
தாழ்ந்த சுபாவம், புதிய விடயம், முயற்சி தாமதம், விருந்துபசாரம்.

**கடகம்**
உடல்நலக்குறைவு, மனப்பயம், வாக்குமேன்மை, திடீர் நன்மை.

**சிங்கம்**
சந்தோசம், சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும், பிரயாண நன்மை.

**கன்னி**
நண்பர் விரோதம், காரிய தாமதம், விவாதம், தனவிரயம்.

**துலாம்**
நல்லமனை வாசம், மேன்மை, நல்ல முயற்சி, சயன சுகம்.

**விருச்சிகம்**
காரிய அலைச்சல் சுபகாரிய செலவு, மனக்கிலேசம், புதிய திருப்பம்.

**தனுசு**
சுபநிகழ்வு, தனலாபம், குடும்ப மகிழ்ச்சி, முயற்சி கைகூடும்.

**மகரம்**
உற்சாகம், பிறருக்கு உதவுதல், செய்தொழில் விருத்தி, நல்ல செய்தி.

**கும்பம்**
காரிய தாமதம், பிரயாணம், மனக்குழப்பம், பித்த ரோகம்.

**மீனம்**
வாகன பயம், உடல் வியாதி, வீண்பகை, காரிய தாமதம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது) **வளவன்**

# வட-கிழக்கில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு விரைவில் நட்டஈடு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற கொடிய யுத்தம் மற்றும் வன்செயல்கள் காரணமாக தமது படகு, மீன்பிடிவலைகள்,உபகரணங்கள் ,வீடுகளை இழந்த மீனவர்கள் நட்டஈடு கோரி அனுப்பிய விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் குழு ஆராய்ந்து வருகின்றதாகவும் இதனால் அவர்களுக்கு விரைவில் நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மீன்பிடித்துறை அமைச்சர் சந்திரசேன விஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதறகமைய வடக்கு-கிழக்கில் உள்ள சுமார் 5 ஆயிரம் மீனவக் குடும்பங்களுக்கு விரைவில் நட்டஈடு கிடைக்கும் என அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

மீன்பிடித்துறை அமைச்சு செயலாளர் தலைமையிலான மேற்படி குழுவில் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சு செயலாளர், வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(க)

# நோர்வே பிரதிநிதிகளுக்கு பலாலி படைத்தளத்தில் வரவேற்பு






நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்ட்கர், எரிக்சொல்ஹெய்ம் உட்பட்ட குழுவினர் நேற்று முன்தினம் காலை விமானம் மூலம் பலாலி விமான நிலையத்திற்கு வருகை தந்தனர்.அவ்வேளை யாழ். பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகத்தில் வைத்து யாழ்.இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் எஸ்.ரி தென்னக்கோன், அவர்களை வரவேற்று யாழ். பிரதேச பாதுகாப்பு நிலை பற்றி விளங்கப்படுத்தினார்.

## விபரங்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு- கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் 31.08.2004இல் உள்ளவாறான உத்தியோகத்தர்களின் விபரங்களை உடன் அனுப்பி வைக்குமாறு சகல மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களையும் உள்ளூராட்சி ஆணையாளர் கோரியுள்ளார்.

இதற்கமைவாக, யாழ். மாவட்டப் பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் க. இராசையா சகல உள்ளூராட்சி நிறுவனங்களிலுள்ள உத்தியோகத்தர்களின் விபரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார். (க-47)

க.பொ.த. (சா.த)
மாணவர்களே! வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

விவாத அரங்கு -5
விடயம்
வீடியோப் படப்பிடிப்பு தமிழர்
கலாசாரத்தைப் பாதிக்கின்றது.
பாதுகாக்கின்றது.

நடுவர் : புத்தூர் சி.சிவநேசன்
(பிரபல சட்டத்தரணி)

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்துசமய விவகார அலுவல்கள திணைக்களத்தின் யாழ் மாவட்ட அலுவலகம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடாத்திவரும் ஆன்மகச் சொற்பொழிவில் இன்று பிப 6.30க்கு "இந்துவாக வாழ்வோம்" எனும் விடயம் குறித்து இறையருள சொற்கோ செல்வநேசன் கவிதரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ந-19)

## நூற்றாண்டு மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நூற்றாண்டு வைபவம் எதிர்வரும் ஜனவரி மாதம 9 ஆம் திகதி பழைய மாணவர் சங்கத்தினால் கல்லூரியில்கொண்டாடப்படவுள்ளது.

இவ்வைபவத்தை முன்னிட்டு பழைய மாணவர் சங்கம் நூற்றாண்டு மலர் ஒன்றினையும் வெளியிடவுள்ளது. இம் மலரில் பழைய மாணவர்களின் விபரமான பட்டியல் பிரசுரிக்கப்படவுள்ளதால் கல்லூரியின் பழைய மாணவாகள் தமது பெயர் முகவரி உள்ளிட்ட விபரங்களை செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்எனும் முகவரிக்கு அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் வெளியிடப்படும் நூற்றாணடு மலரில் பிரசுரிப்பதற்கான கல்லூரிக் காலத்தின் பழைய பசுமையான நினைவுகளை தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ எழுதி அனுப்பும்படி செயலாளர் கேட்டுள்ளார். (க-16)

## மின்கம்பம் சேதம்

(கல்வயல்)

நுணாவில் மத்தி கிராம உத்தியோகதர் பகுதியில் உள்ள அம்மன் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள மின்கம்பம் மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது.

இதனால் அப்பகுதியில் வசித்து வரும் மக்களுக்கும் அப்பகுதியால் பயணம் செய்பவர்களுக்கும் ஆபத்து ஏற்படும் எனத் அச்சம் தெரிவிககப்படுகின்றது. (க-36)

## அன்பளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் பழைய மாணவன் எஸ். தங்கவேல் (இங்கிலாந்து) சுமார் 1இலட்சம் ரூபா பெறுமதியான ஒரு பக்ஸ் இயந்திரம் 3 ,4 மின் விசிறிகள்,இரு அலுமாரிகள்,இரு பௌதிக ஆய்வுகூட மேசை என்பனவற்றை கல்லூரிக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

• இக் கையளிப்பு வைபவத்தில் யாழ். பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம். நடராஜ சுந்தரமும் கலந்துகொண்டார். (ந-52)

## சங்கம நிகழ்வு

(புங்குடுதீவு)


புங்குடுதீவு பிரதேச, ஊரக தேசிய எழுச்சிப் பேரவைகளின் மாதந்த சங்கமநிகழ்வு புங்குடுதீவு மடத்துவெளி கமலாம்பிகை வித்தியாலயத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணியளவில் புங்குடுதீவு பிரதேச தேசிய எழுச்சிப பேரவைச் செயலாளர் கி. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. (க-126)

## கலாசாரம்பேணும் குழுவின் கவனத்துக்கு!


(கோப்பாய்)

கோப்பாய் மத்திப் பகுதியில் இரவுவேளையில் குழுக்களாக மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்கள் வீதியோரங்களிலுள்ள குடியிருப்பாளர்களைர் பெயர் கூறி அழைதது தகாத வார்த்தைகளால் ஏசிச் செல்வது வழமையாகிவிட்டதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

குடிசன அடர்த்தி குறைந்த பகுதிகளிலுள்ள சிறு வீதிகளிலும் பெண்பிள்ளைகள் உள்ள வீடுகளிலும் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்று வருகின்றதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது. (க-79)



கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் தமிழ்விழாவில் யாழ்.கல்வி வலய சித்திரபாட சேவைக்கால ஆசிரியர் செ. வரதராஜனுக்கு விசேட கௌரவிப்பு வழங்கப்பட்டது.
இந்நிகழ்வில் கலந்து கொண்ட செ. வரதராஜன், பாடசாலை அதிபர் சிவகடாட்சம் மற்றும் உப அதிபர் திருமதி கைலைமான் ஆகியோரைப் படத்தில் காணலாம்.



இருபாலை கிழக்கு ஸ்ரீ முருகன் பாலர் பாடசாலை விளையாட்டுவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்திய கலாநிதி வை.தியாகராஜா, சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட வலி.கிழக்கு பிரதேசசபை பொறுப்பதிகாரி எஸ். இரத்தினவேல், எஸ்.தயாபரன் ஆகியோரையும், தலைவர் கி. தங்கவடிவேல் தலைமையுரையாற்றுவதையும் படத்தில் காணலாம். (படம்: கல்வியங்காடு நிருபர்)



உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் பரிசளிப்புவிழா நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா உரையாற்றுவதனையும் அறநெறித் தொண்டர் சிவ. ஆறுமுகஸ்வாமி, வலிகாமம் அரசியல் துறைப் பொறுப்பாளர் து.கிரி மற்றும் யாழ்.மாவட்ட அரசியல் துறையின் ஊடகப் பேச்சாளர் இமையவன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதனையும் படத்தில் காணலாம்.

## இடமாற்றக் கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளன

(சாவகச்சேரி)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும்இணைந்த சேவை உத்தியோகத்தர்களிற்குரிய 2005ஆம் ஆண்டிற்கான இடமாற்றக கட்டளைகள் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இடமாற்றக் கட்டளைகள் தொடர்பான மேன்முறையீடுகள் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-47)

## அரிசி, சீனியை இறக்குமதி செய்ய அரசு துரித நடவடிக்கை

(கொழும்பு)

அரிசி,சீனி உட்பட அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றை இவ் வாரத்தில் இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக வர்த்தக நுகவோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணாண்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

அதிகரித்துச் செலலும பொருடகளின விலையைக் கட்டுப்படுத்தவே அரசு இத்தகைய நடவடிக்கையை எடுததுள்ளதாகத் தொிவித்த அவர்,வரவு- செலவுத்திட்ட மூலம் இதற்கு நிவாரணம் வழங்கப்படவுள்ளதாகவும் கெரிவிக்துள்ளார்.

இதற்கமைய முதலில் பாகிஸ்தானில் இருந்து அரிசியையும் பிறேசிலில் இருந்து சீனியையும் இறக்குமதி செய்ய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

அரிசி, சீனி என்பனவற்றை இறக்குமதி செய்த பின்னரும் அவற்றினை அதிகரித்த விலையில் வர்த்தகர்கள் விற்பார்களாயின் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, சீனி என்பனவற்றை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களூடாக மக்களுக்கு விநியோகிக்க அரசு முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-61)

# முற்றிக் கனிந்த பக்தி சித்தத்தைச் சுத்தி செய்யும்

வீட்டிலோ அல்லது நாட்டிலோ அல்லது நாடுகள் அனைத்தும்



ஒன்றிணைந்த உலகத்திலோ நிகழ்கின்ற அனர்த்தங்கள் அனைத்திற்கும் மூல காரணமாக விளங்குவது சித்தம் தெளிவின்மையாகும். மனிதனுக்குள் நின்று ஆட்டிப் படைக்கும் அந்தக் கரணங்கள் நான்கு. அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன. இந்த அந்தக் கரணங்கள் நான்கிற்கும் வெளிப்படையாகவோ மறைமுகமாகவோ ஒன்றிற்கொன்று தொடர்பு உண்டு.

ஒருவன் ஒரு செயலை ஆற்றுகின்ற போது நான்கு கரணங்களும் தொழிற்பட்டு எடுக்கும் முடிவே செயலாக பர்ணமிக்கின்றது. நான்கு கரணங்களும் ஒன்றிற்கு ஒன்று மாறுபடுகின்றபோது சித்தம் செய்யும் தீர்மானமே செயல் உருவம் பெறுகின்றது.

நான்கு கரணங்களும் தொட்டுப் பார்க்கவோ அல்லது எட்டிப் பார்க்கவோ, முகர்ந்து பார்க்கவோ முடியாதவை. அதி சுக்குமமாக அறியமுடியாத நிலையில் நின்று மனிதனை ஆட்டிப்படைக்கும் ஆற்றல் மிக்கவை.

கண்ணாடியை புகை மண்டி ஒளியை வெளிக்காட்டாமல் மறைப்பது போல அழுக்காறு, அவா, வெகுளி, வஞ்சகம், பெருமை, காமம், குரோதம் போன்ற தீய குணங்கள் சித்தத்தில் மண்டி மூடிக்கிடப்பதால் சித்தம் தெளிவின்மையில் நின்று செயலாற்றுகின்றது. குற்ற குணங்களின் சேட்டைகளால் விளைந்த பாரதூரமான ஈடுசெய்யமுடியாத சமுதாய வீழ்ச்சிகளை புராண இதிகாசங்கள் நமக்குப் போதிக்கின்றன.

பரந்துபட்ட பாரத தேசத்தில் ஐந்தே ஐந்து வீடுகளைப் பாண்டவர் பக்கம் விட்டிருந்தால் வரும் கேடு என்ன? கட்டிய கணவன் தந்த வரம்தானே என்று கைகேயி விட்டிருந்தால் இராம இராவண யுத்தம் விளைந்திருக்குமா?

தேவசிறையை விட்டால் இன்னும் சூரபன்மன் மேலும் சிறப்போடு நீண்ட நாள் வாழ்ந்திருக்கலாமே! முடிந்ததா?

அழிவு... அழிவு.... அழிவு... உலகம் கண்ட விளைவு.

சுத்திகரித்த சித்தத் தெளிவின்மையே ஒவ்வொரு அனர்த்தங்களுக்குச் சாதகமான காரணங்களைக் கற்பித்துச் சாந்தியடைய முற்படுகின்றது.

சித்தம் தெளிய பக்தி வெள்ளம் ஊற்றெடுக்கவேண்டும். உண்மை அறிவு - ஞானம் தலையெடுக்க இடையறாத சிவ சிந்தனை தியாகத்தில் ஈடுபடல்வேண்டும். வேள்விகளை கேட்பதன் நோக்கம் சித்தம் தெளியும் பொருட்டாகவே. "யாழின் மொழியாழல் தனிப்பாகரைப் போற்றும் போகம் ... புரிந்தின் புறச்செய்த போற்றல் வாழும் திறம் ஈசர் மலர் கழர் வாழ்தல் என்பார்"

"நல் வேள்வியெல்லாம் நஞ்சனி கண்டர் பாதம் நன்னிடம் செய்து.... ஈசர் தாழ் நிழல் தங்கினாரே" என்பது பெரியபுராணம்.

"பத்திநெறி அறிவித்து பல வினைகள் பாறுவண்ணம் சித்தம் மலம் அறிவித்து சிவமாக்கி எனை யாண்ட" என்பது திருவாசகம்.

பக்தி வளர்ந்து பழுத்துச் பயன்படச் சித்தம் தெளியும், சித்தம் தெளியச் சிவ தியானம், சிவவழிபாடு, சிவ நாமம் நவிலல் அவசியம். □

**சிவசண்முகவடிவேல்**

## வெள்ளி நற்சிந்தனை

# மேலதிக நேர பரிசோதனைகளை நடாத்தும் பொறுப்பு தனியாரிடம்?

(கொழும்பு)

மேலதிக நேர வைத்திய ஆய்வுகூடப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு தனியார் துறையினரிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மேலதிக நேர இரசாயன ஆய்வுகூடப் பரிசோதனைகளைத் தனியார் துறையின் மூலம் செலவு ஏற்படுமென சகல வைத்திய ஆய்வு தொழில்நுட்ப நிபுணர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க வைத்தியசாலைகளில் மேதில நேரப் பரிசோதனைகளுக்கென சங்க உறுப்பினர்களுக்கு அலகு ஒன்றிற்கு 22 ருபா 50 சதமே வழங்கப்பட்டதாக குறிப்பிட்ட சங்கத்தின் தலைவர் சிசுரகுமார,

இதனைத் தனியார் துறை மூலம் மேற்கொள்ளுவதனால் அலகு ஒன்றிற்கு சுமார் 120 ருபா செலவாகுமெனக் குறிப்பிட்டார்.

இத்தகையதொரு நிலையில், அரச வைத்திய ஆய்வுகூடத் தொழில்நுட்ப நிபுணர்களின் மேலதிக நேர சேவைக்கான கொடுப்பனவை வழங்க அரசு முன்வராது, தனியார் துறையினரிடம் மேதில சேவையை நடாத்தும் பொறுப்பை வழங்கவிருப்பது தமக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (க-61)

# ஜோர்ஜ் புஷ்ஷை ஜனாதிபதி சந்திப்பார்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அடுத்தவாரம் ஐ.நா. சபைக்கு செல்லவுள்ளார். அங்கு செல்லும் அவர் இந்திய பாகிஸ்தான் மற்றும் யப்பான் தலைவர்கள் உட்பட பல உலகத் தலைவர்களையும் சந்திக்கவுள்ளதாக ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் பர்வேஷ்முஷாரப், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், யப்பான் பிரதமர் ஜனிசிரோ கொய்சுமி ஆகியோரை நியூஜோர்க்கில் தனித் தனியாகச் சந்தித்து உரையாடவுள்ளார்.

சமாதான விடயத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் பொருளாதாரம், வர்த்தகம், பிராந்திய ஒத்துழைப்பு ஆகிய விடயங்கள் குறித்து இச் சந்திப்பின் போது பேசப்படவுள்ளது.

செப்ரெம்பர் 21 ஆம் திகதி சிட்னி நாட்டின் ஜனாதிபதி றிக்கடோ லாகோஸ் எஸ்.கோபாலைச் சந்தித்து உரையாடுவார். அதன் பின்னர் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் திருமதி புஷ்ஷும் ஜனாதிபதி சந்திரிகாவை வரவேற்கவுள்ளனர். ஜனாதிபதியுடன் வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கவும் செல்லவுள்ளனர். ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் தொடக்க நாளன்று ஜனாதிபதி உரையாற்றவுள்ளார். முதன் முதலில் ஐ.நா.சபையில் 1995 இல் உரையாற்றி ஜனாதிபதிக்கு இது நான்காவது ஐ.நா. உரையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-06)

# மாணவர்களின் வளமான வாழ்வுக்கு கல்வியறிவே மிக இன்றியமையாதது

## ரவிராஜ் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் மாணவர்



களுக்கான கணனி ஒலி, ஒளி நிலையம் ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ்ஜினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது.

வித்தியாலய அதிபர் தம்பு கந்தையா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா சிறப்பு விருந்தினராகப் பங்கு கொண்டிருந்தார்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்குகொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அங்கு பேசும் போது,

எமது மாணவர்கள் நவீன தொழில்நுட்பக் கல்வியில் மேன்மையான அறிவையும், அனுபவத்தையும் பெற்றுக் கொள்ளவேண்டும். எமது மாணவர்களிடம் இருந்து நிறையவே எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு எமது மாணவர்கள் தமது கல்வியில் நல்ல ஆர்வத்தையும், அக்கறையையும் செலுத்தவேண்டும்.

எமது மாணவர்களின் வளமானவாழ்வுக்கு கல்வி அறிவே முக்கியமானதாகும். இன்று உலகம் பூராவும் பரந்து வாழ்கின்ற தமிழர்களின் அறிவுக்கவசமாக கல்வியே இருந்து வருகின்றது எனக் குறிப்பிட்டார்.

இந் நிகழ்வில் கல்லூரியின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களும் பங்குபற்றியிருந்தனர். (ற-16)

# ஆலோசனைக் கூட்டம்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு பச்சிலைப் பள்ளி பிரதேசத்திலுள்ள முள்ளியான் மண்டலாய் பிள்ளையார் கோவிலை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஆலோசனைக் கூட்டமொன்று எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கோவில் முன்றலில் நடைபெறவுள்ளது.

1992 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வெற்றிலைக்கேணி கட்டைக்காடு தரை இறக்க இராணுவ நடவடிக்கையால் முற்றாகச் சேதமடைந்த இக்கோவிலை புனரமைக்க வடமராட்சி கிழக்கு புனரமைப்பு புனர்வாழ்வு நிறுவனம் முன்வந்துள்ளது.

மேற்படி ஆலய மூர்த்திகளின் சிலைகள் குருக்களால் மீட்கப்பட்டு தம்பசிட்டி மாயக்கை பிள்ளையார் கோவிலிலும் பின்னர் வத்தளை கோவிலிலும் வைக்கப்பட்டு பூசை செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற-35)

# கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசம் கையளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை கற்கோவளம் பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றிய பிரதேசம் கிராமசேவை உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வராத்துப்பளை ஈஸ்வரி அம்மன் ஆலயத்திலிருந்து ஆனைவிழுந்தான் வீதிவரையுமான பிரதேசமே கற்கோவளம் கிராம சேவை அலுவலர் எஸ்.சிவசண்முகத்திடம் கடந்த வியாழக்கிழமை கையளிக்கப்பட்டுள்ளது.

இவ்வைபவத்தில் டெனிஸ் கண்ணிவெடி அகற்றும் குழுவின் தொழில்நுட்ப உத்தியோகத்தர் சாமுவேல் பௌநிலா, யாழ். செயலக கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டு அலுவலர்களான ரமேஸ் குமார், எஸ்.கேதீஸ்வரன், சர்வோதய உறுப்பினர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (ற-52)

# போக்குவரத்துச் சேவைகளை விஸ்தரிக்க இலண்டனிலிருந்து பேருந்துகளை பெற்றுத் தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பஸ் போக்குவரத்துச் சேவை போதியளவு திருப்தியற்ற நிலையில் இருந்து வருவதால், பாடசாலை செல்லும் மாணவர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இதனால் மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிப்படைகின்றது.

இந்த நிலையை மாற்றுவதற்கு இலண்டன் மாநகரில் இருக்கின்ற தமிழர் அமைப்புகள் அங்கிருந்து பேருந்துகளை அன்பளிப்பாகப் பெற்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இத்தகைய கோரிக்கையை யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவரான சு.பரமநாதன் இலண்டனில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள இலண்டன் கனக துர்க்கா தேவஸ்தானத்தின் பிரதிநிதியான எஸ். அபயலிங்கத்திடம் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் மேலும் தெரிவிக்கையில்,

'யாழ்ப்பாணக் குடாநாட்டில் போக்குவரத்துச் சேவையை மேம்படுத்துவதற்குப் போதிய பேருந்துகள் இல்லாமல் இருக்கின்றன. இந்த நிலையில் அரசாங்கத்தினால் வடபிராந்தியப் போக்குவரத்துச் சபைக்கு வழங்குவதாக ஒப்புக் கொள்ளப்பட்ட பஸ்வண்டிகள் கூட இன்னமும் வந்து சேரவில்லை.

அத்துடன், வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையில் பழுதடைந்த நிலையில் இருக்கும் பேருந்துகளைத் திருத்தம் செய்வதற்கான உதிரிப்பாகங்கள் கூட இங்கு இல்லாமல் இருக்கின்றன. இந்த நிலையில், வடபகுதியில் போக்குவரத்துச் சேவை அபிவிருத்தியடையக் கூடிய வாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவே உள்ளன.

இந்த நிலையில், எமது மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் முயற்சியாக இலண்டனில் இருந்து பேருந்துகளைப் பெற்று இங்கு வழங்கவேண்டும். போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

இக்கோரிக்கை தொடர்பான சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக இலண்டன் கனக துர்க்கா தேவஸ்தான பிரதிநிதி தெரிவித்துள்ளார். (ற-16)

# ஆப்கானில் சிறைவைக்கப்பட்டிருந்த 360 பாகிஸ்தான் போராளிகள் விடுதலை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுடன் சேர்ந்து போராடிய 360 பாகிஸ்தான் போராளி சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

2001 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில், வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

தலிபான்களுடன் இவர்களுக்கு இருந்த தொடர்புகள் பற்றி பாகிஸ்தான் விசாரணை நடத்தியதில் பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு எந்த விதமான பாதிப்பும் ஏற்படாது என்ற உத்தர வைத்தின் பேரிலேயே இவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்.

விடுதலை செய்யப்பட்ட போராளிகள் கருத்துத் தெரிவிக்கையில், இவர்களில் அனேகர் தம் சுபீட்சமான எதிர்காலம் என்பன போன்ற வாக்குறுதிகளினால் கவரப்பட்டே, ஆப்கானிஸ்தான் வந்ததாகத் தெரிவித்தனர். ஆனால் சுபீட்சத்துக்குப் பதிலாக வடபுலக் கூட்டுப் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின் தமக்கு கிடைத்தது சொல்லொணாத் துன்பங்களே என்றார்கள்.

இந்தப் பாகிஸ்தான் கைதிகள் கடந்த மாதம் ஆப்கான் அதிபர் கார்ஸாய் பாகிஸ்தான் அதிபர் முஷ்ரபுக்கும் இடையில் ஏற்பட்ட உடன் பாட்டையடுத்தே விடுதலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)



பாகிஸ்தானிலுள்ள மதப் பாடசாலைகளிலிருந்து வடபுலக் கூட்டு முன்னணி அமெரிக்க ஆதரவாளர்கள் முதலியோருக் கெதிரான புனித யுத்

## பாக்.தீவிரவாதிகள் கைது

பாகிஸ்தான் நாட்டைச் சேர்ந்த தீவிரவாதிகள் 10பேரை ஸ்பெயின் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஸ்பெயினில் உள்ள கேட்டலோனியா என்ற இடத்தில் வைத்தே நேற்றுமுன்தினம் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஸ்பெயினில் தீவிரவாத நடவடிக்கைகளில ஈடுபடுவதற்காக இவர்கள் ஊடுருவியிருந்ததாகவும் இவர்கள் கைதுசெய்யப்பட்டபோது அவர்களிடம் சில சட்டவிரோத ஆயுதங்களும் தாக்குதல்களுக்கான திட்டங்கள் அடங்கிய கோவைகளும் கைப்பற்றப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும் இது குறித்த தகவல்களை வெளியிட பாகிஸ்தான் பொலிஸார் மறுப்புத் தெரிவித்துள்ளனர். (ப)

# வடகொரியாவில் வெடித்தது அதிபயங்கர அணுகுண்டுகள் அல்ல

(சியோல்)

வடகொரியா அணுஆயுத சோதனை நடத்தவில்லை என்றும் நீரமின் திட்டம் அணை ஒன்றை உடைத்து வழி ஏற்படுத்தவே வெடிகுண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டதாகவும் வடகொரிய வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

அணுஆயுத சோதனை நடத்த வடகொரியா பல ஆண்டுகளாக முயற்சிக்கிறது. ஆனால் அமெரிக்கா, தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் அதற்குத் தடையாக உள்ளன. அமெரிக்காவின மிரடடல் காரணமாக வடகொரியா அடக்கிவாசித்தாலும், அதனிடம் ஏற்கனவே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அணுகுண்டுகள் அல்லது அணுஆயுதங்கள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அடுத்தடுத்து இரண்டுமுறை மிகப் பெரிய வெடிகுண்டுச் சத்தம் கேட்டதாகவும், அதைத் தொடர்ந்து வானில் நான்கு கிலோ மீற்றர் வட்டத்துக்குப் புகைமண்டலம் ஏற்பட்டதாகவும்,

வடகொரியா கடந்த ஒன்பதாம் திகதி அணு ஆயுத சோதனை நடத்தியதாகவும் தகவல் வெளியானது. வடகொரியாவின் ஆயுதத் திட்டங்கள் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருககும் அமெரிக்கா, தென்கொரியா ஆகிய நாடுகள் இதனால் பெரும் அதிர்ச்சி அடைந்தன.

குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்ட யாங்காங் பகுதியில் வடகொரியாவின் இரகசிய ஏவுகணைத் தளங்கள் உள்ளன. ஆனால். வெடிகுண்டுகள் வெடித்த இடத்திற்கும் அதற்கும் அதிக இடைவெளி உள்ளது. பாதாள ஆயுதக கிடங்கில அல்லது ஆயுத தயாரிப்பு தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்து காரணமாக வெடிகுண்டுச் சமபவம் நடந்திருக்கலாம் என்று தென்கொரிய வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் வடகொரியாவில் அணுஆயுத சோதனை நடத்தப்படவில்லை. அதற்கான அறிகுறிகள் தென்படவில்லை என்றும் நீர்மின் திட்ட அணைக்கு வழி ஏற்படுத்துவற்காக வெடிகுண்டுகள் வெடிக்க வைக்கப் பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ப)



அல்பேனியா நாட்டில் நடைபெற்ற மிஸ்குளோப் 2004 அழகிப் போட்டியில், ரஷ்ய அழகி கிரிஸ்டினா சிலாவின்ஸ்கியா மிஸ்குளோப் 2004 ஆகமுடி சுட்டப்பட்டார்.

# இரத்த விற்பனை மூலம் சீனாவில் எயிட்ஸ் பரவல்

(பீஜிங்)

சீனாவில் கடந்த 1990ம் ஆண்டுகளில் காசுக்காக இரத்தத்தை விற்றவர்கள் மூலம் எயிட்ஸ் நோய் அதிகமாகப் பரவியுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

சீனாவில் 8இலட்சத்து 40ஆயிரம் பேர் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 25ஆயிரத்து 36பேர் ஹெனான் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். இந்த மாகாணத்தைச் சேர்ந்த பெரும்பாலான ஏழை விவசாயிகள் ஆவர். இவர்கள் 1990ம் ஆண்டுகளில் வறுமையின் காரணமாக காசுக்காக தங்கள் இரத்தத்தை விற்றுள்ளனர். மேலும் இந்த மாகாணத்தில் உள்ளசோதனைக் கூடங்களும் சுகாதாரம் இல்லாதவை. அதுமட்டுமல்லாது இரத்தம் சேகரிக்கப்படும் பரிசோதனைக் குழாய்கள் போதுமான அளவில் சுத்தம் செய்யப்படாமல் இருந்துள்ள இந்நிலையில், இவர்களால் விற்பனை செய்யப்பட்ட இரத்தங்களை விலைக்கு வாங்கிப் பயன்படுத்தியதனாலேயே சீனாவில் அதிகப் பேருக்கு எயிட்ஸ் ஏற்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை சீனா எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால், இந்த நோயால் ஒரு கோடிக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்படும் அபாயம் உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துளளது. இதை தொடர்ந்து சீன அரசு, காசுக்காக இரத்தம் விற்பதைத் தடைசெய்துள்ளது. (ப)

## WORLD NEWS உலக தரிசனம்

# உள்வீட்டு விவகாரத்தில் தலையிடாதே அமெரிக்காவுக்கு ரஷ்யா சாட்டையடி

(அஸ்தனா)

ரஷ்ய பாதுகாப்பைப் பலப்படுத்த அதிபர் விளாடிமிர் புடின் அறிவித்துள்ள தேர்தல் சீர்திருத்தத்தை அமெரிக்க எதிர்த்துள்ளதற்கு ரஷ்யா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் உள்நாட்டு விவகாரம். இதில் தலையிட அமெரிக்காவுக்கு உரிமையில்லை என்று சுட்டிக்காட்டியே வெளியுறவு அமைச்சர் செர்ஜிலோவரோங் பதிலடி கொடுத்தார். ரஷ்யாவில் தீவிரவாதம் தலைதூக்குகிறது. செச்னிய தீவீரவாதிகள் தனிநாடு கேட்டு நடத்தும் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள் ளன. சமீபத்தில் பள்ளியில் நுழைந்த செச்னிய தீவிரவாதிகள் 400 க்கும் மேற்பட்ட மாணவர்களை சுட்டுக் கொன்றனர்.இரத்த ஆறு ஓடிய இச்சம்பவத்திற்குப் பின் , தீவிரவாத பிரச்சினைக்குத் தீவுகாண ரஷ்ய அதிபர் விளாடிமிா புடின் உறுதிப் பூண்டுள்ளார்.

இதற்காக, புடின் பல சீர்திருத்தங்களை அறிவித்துள்ளார். அந்த வகையில் முதல் கட்டமாக, பிராந்திய கவர்னர்களுக்கு நேரடியாக தேர்தல் நடத்தும் நடைமுறையை இரத்து செய்ய முடிவு செய்துள்ளார். நேரடித் தேர்தல்கள மூலம் நாட்டை சீகுலைக்கக் கூடிய சக்திகள் பதவிக்கு வருவதால் தீவிரவாதம், போன்ற பிரச்சினைகள் தலைதூக்குவதாக அவர் கருதுகிறார். அதிபரால் நியமிக்கப்படும் கவர்னர்கள் பிராந்தியத்தை நிர்வாகம் செய்தால், இது போன்ற பிரச்சினைகள் எழாது என்ற புடினின் இத்திட்டப்படி , பிராந்திய கவர்னர்கள் இனிமேல் அதிபரே நியமிப்பார். அவருடைய நியமனத்துக்கு அந்தந்த பிராந்திய சட்டசபைகள் அங்கீகாரம் அளிக்கும். இதன் மூலம் பிராந்தியத்தின் தலைமை நிர்வாகிகள் அனைவரும் அதிபரின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயல்படுவார்கள். தீவிரவாதத்தை ஒழிக்கவும்,ரஷ்யாவின் பாதுகாப்பை பலப்படுத்தவும் இந் நடவடிக்கையை எடுத்துள்ளார்.

புடினின் நடவடிக்கையால் ரஷ்யாவின் ஜனநாயக சீர்திருத்தங்கள் பாதிக்கும். இது தொடர்பாக அமெரிக்கா தனது எதிர்ப்பை தெரிவிக்கிறது என அதன் வெளியுறவுத் துறை அமைச்சர் தகவலை தெரிவித்தார். தீவிரவாதத்தை எதிர்கொள்ளும் நடவடிக்கைள் பற்றி விவாதிக்க காமன் வெல்த் சுதந்திர நாடுகள் அதிபர்களின் கூட்டத்தை புடின் கூடடியுள்ளார். கஜகஸ்தானல் நடைபெறும் .இக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றுள்ள ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லோவ்ரோவ், புடினின் நடவடிக்கையை விமர்சித்த அமெரிக்காவுக்கு கடுமையான பதிலடி கொடுத்தார்.

செர்ஜி அளித்த பேட்டியில் ரஷ்யாவில் நடந்து கொண்டிருப்பது உள்நாட்டு விவகாரம் முதலில், இதில் தலையிட அமெரிக்காவுக்கு உரிமை இல்லை.தனது நாட்டின் ஜனநாயக மாதிரியை ரஷ்யா உள்ளிட்ட எந்த நாட்டின் மீதும் திணிக்கும் அதிகாரம் அதற்கு கிடையாது.

கொலின் பவல் தனது பேச்சின் மூலம் அமெரிக்காவின் ஜனநாயக மாதிரியை மற்றவர்களும் காப்ப அடிக்க வேண்டும் என்ற கருத்தை மீண்டும் ஒருமுறை பறைசாற்றியுள்ளார். அமெரிக்காவின் செயல்பாடுகளில் ரஷ்யா தலையிடுவதில்லை. அந்நாட்டு அதிபர் தேர்தல் நடைமுறையை நாங்கள் விமசிக்க வில்லையே என்றார். (ப)

# ஆப்கானின் வானாநகருள் இராணுவத்தினரின் தாக்குதல்கள்

ஆப்கானிஸ்தானின் மலைப் பிரதேசத்தில் உள்ள வானாநகிற்கு பொது மக்களும், பத்திரிகையாளர்களும், வெளிநாட்டவர்கள் ஆகியோர் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது

மேற்படி பிரதேசத்தை ஆப்கான் படையினர் இராணுவ பாதுகாப்பு பிரதேசமாக இருப்பதனால், அங்கு சந்தேகத்திற்கிடமாக நடமாடுவோர் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்திவருகின்றனர்.

இதனால் அப்பகுதி கொலையும், மரணமும மலிந்த பகுதியாகக் காணப்படுகிறது. அத்துடன் அங்கு உணவுப் பஞ்சம் ஏற்படும் நிலையும் அதிகரித்துள்ளது. (ப)



# தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்: மூடப்பட்ட ரஷ்யப் பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டன

(பெஸ்லான்)

தீவிரவாதிகளின் தாக்குதலையடுத்து மூடப்பட்ட தென்பகுதியில் உள்ள பெஸ்லான் நகர் பள்ளிகள் இரண்டு வார இடவெளிக்குப் பின் மீண்டும் திறக்கப்பட்டன.

பள்ளிக் குழந்தைகள் உள்பட 1200 பேரை பிணைக் கைதிகளாகத் தீவிரவாதிகள் பிடித்து வைத்திருந்தனர்.

அவர்களை மீட்க இராணுவத்தினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற சண்டைகளில் 400ற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர்.

உலக நாடுகளை அதிர்ச்சி அடையச் செய்த இச்சம்பவத்தைத் தொடர்ந்து, முடப்பட்ட பொஸ்லான் நகரப் பள்ளிகள் இரண்டு வாரங்களுக்குப் பிறகு தற்போது மீண்டும் திறக்கப்பட்டன. பள்ளி தொடங்கியதும் முதலில் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சில் செலுத்தப் பட்டது.

பள்ளிகளைச் சுற்றி பாதுகாப்பு வீரர்கள் ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

ஆயுதங்கள் மற்றும் வெடிகுண்டுகள் உள்ளனவா என்ற சோதனைகளின் பின்னரே திறக்கப்பட்டுள்ளன. (ப)



ஜம்மு—காஷ்மீர் மாநிலத்தில் 14500 அடி உயரத்தில் அமைந்துள்ள கைலாஷ் ஏரிக்கரையில் எக்காளம் இசைக்கிறார், அங்கு புனித யாத்திரையாக வந்த பக்தர்.

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

சமூகக்கல்வியும் வரலாறும் I

மணி - 1

ஆக்கம் :
திருமதி ந. சண்முகநாதன்
யா/இணுவில் இந்துக்கல்லூரி இணுவில்

**1-5வரையான வினாக்களுக்கு உலகப் படத்தை அடிப்படையாகக் கொள்க.**

01. அண்மையில் யூரோ நாணயத்தை ஏற்றுக்கொள்வதில்லை என முடிவு செய்த நாட்டைக் குறித்து காட்டும் எழுத்து?
1. J 2. G 3. I 4. H



02. 2007ம் ஆண்டு பினிக்ஸ் பேண்டர் எனும் விண்கலத்தை செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பவுள்ள நாட்டை குறித்துக் காட்டும் எழுத்து?
1. K 2. G 3. L 4. I

03. D என்ற ஆங்கில எழுத்தி னால குறித்துக் காட்டும் புல் நிலம்எது?
1. ஸ்ரெப்பீஸ் 2. டவுண்ஸ் 3. பம்பாஸ் 4. வெல்ட்

04. வட கடலைக் குறித்துக் காட்டும் எழுத்து?
1. F 2. E 3. B 4. G

05. "A"என்ற எழுத்துக் குறித்துக் காட்டும் மலை எது?
1. யூரல் 2. அந்தீஸ் 3. அற்லஸ் 3. பெரிய பிரிப்பு மலை

**6-10 வரையான வினாக்களுக்கு இலங்கைப் படத்தைப் பார்த்து விடை எழுதுக.**

06. கல்யாணி நதியைக் குறித்துக் காட்டும் எழுத்து?
1. B 2.C 3.A 4.D



07. "E" என்ற எழுத்துக் குறித்துக் காட்டும் பண்டைய துறைமுகத்தின் பெயர்?
1. கொடவாய 2. கோகர்ண
3. யம்புகோள 4. கற்பிட்டி

08. இலங்கையில் மிக உயரமான பேதுறுதாலகால (2524) மலைத் தொடர் எந்த எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது?
1. K 2. T 3.L 4. J

09. ஆரியர் குடியேற்றங்களான உருவெல, உபத்ஸ்ஸகாம போன்றவற்றை ஒழுஙகு முறையில் குறித்த எழுத்துக்கள்?
1. HM 2. MH 3. NM 4. NO

10. இரத்மலானை விமான நிலையத்தின் அமைவிடத்தை குறித்துக் காட்டும் எழுத்து?
1. Q 2. E 3.P 4. N

11.பின்வருவனவற்றில் இலங்கையில் தொடர்ச்சியான நீர்மின் வலு உற்பத்தி அளவைத் தீர்மானிக்கும் அடிப்படை காரணிகளாக அமைவது?
1. ஆண்டு மழை வீழ்ச்சிஅளவு 2.சக்தி உற்பத்திக்கு பயன்படும் மூலதனம்
3. நுகர்வோரின் கேள்வி 4.வலு நிலையங்களை போசிக்கும் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவு

12. சுகாதார சேவைகள் வளர்ச்சியுற வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்ட அமைப்பு?
1. UNICEF 2.WHO 3. UNHCR 4. WFR


13. மக்களின் சமூக வாழ்க்கையில் அதிக செல்வாக்கு ஏற்படுத்தி உயர்ந்தளவு முன்னேற்றத்தை அடைந்துள்ள துறை எது?
1. கல்வி 2. சுகாதாரம் 3. தகவல் தொழில்நுட்பம் 4. ஏற்றுமதி விவசாயம்

14. போதைப் பொருட்கள். பாவித்தல் சட்டவிரோதமான போக்குவரத்துத் தொடர்பான சர்வதேச மகாநாடு நடைபெறும் இடம் எது?
1.நியூயோர்க் 2.மெக்சிக்கோ 3.வியன்னா 4.பரீஸ்

15. 21 வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப் பட்டது.இது எந்த அரசியல் யாப்பின் மூலம் வழங்கப்பட்டது?
1. 1921ன் மனிங்சீர்திருத்தம் 2. 1931ன் டொனமூர் யாப்பு
3. 1947ன் சோல்பரி யாப்பு 4. 1910ன் மக்கலம் யாப்பு

16. சப்தா ஒப்பந்தம் எந்த நாட்டிடையே கைச்சாத்திடப்பட்டது?
1. பொதுநலவாய நாடுகள் 2.GT நாடுகள்
3. சார்க் நாடுகள் 4. ஐரோப்பிய பொதுசந்தை நாடுகள்

**17-20 வரையான வினாக்களுக்கு குளத்தின் அமைப்பை அடிப்படையாகக் கொள்க.**



17. குளத்து நீரை வயலுக்குரிய நிலங்களுக்கு பாய்ச்சுவதற்கு பயன்படுவது எது?
1. கலிங்கல் 2.சுருங்கை 3.குளக்கட்டு
4. கலிங்கற்றொட்டி

18. "C" என்ற எழுத்துக் குறிக்கும் குளத்தின் கூறு?
1.கால்வாய் 2.அலைதாங்கி 3.சுருங்கை
4.கலிங்கல்

19. "B" என்ற எழுத்து குறித்து காட்டும் பிரதான கூறு?
1. அலைதாங்கி 2.சுருங்கை
3 .கலிங்கற்றொட்டி 4.கலிங்கல்

20. "E" என்ற எழுத்தினால் குறித்துக் காட்டும் பிரதான கூறு?
1. சுவடு 2. காவற்கல் 3. கலிங்கற்றொட்டி 4. கால்வாய்

21. பல்வேறு புறச் செல்வாக்கு களுக்கு உட்பட்டபோது இலங்கையில் தனித்துவமான கலாசாரக் கோலம் தோன்று வதற்கு செல்வாக்கு செலுத்திய முக்கிய காரணி எது?
1.உள்ளகப் பௌதீக அம்சங்கள் 2. இந்து சமுத்திரத்தின் சுதந்திர நிலையமாக அமைந்திருத்தல்
3. தீவாக அமைந்திருத்தல் 4. இந்தியாவிற்கு அண்மையில் அமைந்திருத்தல்

22. உன்னதமான கலைத்திறனுக்கும் கட்டிடக்கலை அமைப்பிற்கும் உதாரணமாக விளங்குவது?
1.தேவகுள்ளர்கள் 2. அனுராதபுரக் குட்டம் பொய்கை
3.ரூவான் வெலிசாயாவின் யானைச்சுவர் 4. கலிங்கற்றொட்டி

23.இஞ்சியைக் கொடுத்து மிளகாய் வாங்கிய மன்னன் என்ற வாசகத்தால் அழைக் கப்பட்ட மன்னன்?
1. 1ம் விமலதர்ம சூரியன் 2. 1ம் இராஜசிங்கன்
3. 2ம் இராஜசிங்கன் 4. 1ம் விஜயபாகு

24.ஜனநாயக முறைமை வெற்றியடைவதற்கு மிகவும் உன்னதமான காரணி எது?
1. பொருளாதாரம் உயர்மட்டத்தில் இருத்தல்
2. அரசியல் அறிவுபடைத்த மக்கள் இருத்தல்
3. சுதந்திரமான வெகுசனத் தொடர்பு இருத்தல்
4. இரு அரசியற் கட்சிகள் மட்டும் இருத்தல்

25. வருடத்தில் 2000mm க்கு மேல் மழைவீழ்ச்சியைப் பெறும் நகரங்களின் தொகுதியை பின்வருவனவற்றில் இருந்து தெரிவு செய்க?
1. காலி, கண்டி, அம்பாந்தோட்டை, தெனியாய
2. மாத்தளை, ஹட்டன், குருநாகல, புத்தளம்
3. மாத்தளை, கண்டி, நுவரெலியா, ஹட்டன்
4. நுவரெலியா, கேகாலை, மட்டக்களப்பு, பொத்துவில

26. பின்வரும் நிகழ்வுகளை வரலாற்று ஒழுங்கு வரிசைப்படி தருகின்ற சரியான விடை எது?

A. ஊவா வெல்லச கிளர்ச்சி ஏற்பட்டமை
B. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருகை தரல்
C. 2ம் இராஜசிங்கனின் ஆட்சிக் காலம்
D. 1ம் விஜயபாகுவின் ஆட்சிக் காலம்

1. **DCBA** 2. **DABC** 3. **DBAC** 4. **DBCA**

27. எந்த மன்னன் காலத்தில் பிரித்தானியர் கண்டி இராட்சியத்தைக்கைப்பற்றினர்?
1. 1ம் இராஜசிங்கன் 2. ஶ்ரீ விக்கிரம இராஜசிங்கன்
3. கீர்த்தி ஶ்ரீராஜ சிங்கன் 4. 2ம் விமலதர்ம சூரியன்

28. இரட்டை ஆட்சி எந்த ஆண்டில் இருந்து எந்த ஆண்டுவரை இடம்பெற்றது.
1. 1898-1902 2. 1796-1998 3. 1798-1802 4.1799-1803

29. எழுத்தறிவு வீதம் மிகக்குறைந்த மட்டத்தில் காணப்படும் நாடு?
1. நைஜீரியா 2.பிஜி 3.ஆப்கானிஸ்தான் 4.நேபாளம்

30. A. அரசியல் அறிவுபடைத்த மக்கள் இருத்தல்
B. சிறுபான்மையினரை அடக்கியாளும் பெருமான்மையினர்
C. நாட்டின் பொருளாதாரம் கீழ் நிலையில் இல்லாமை
D. சுதந்திரமான ஊடகத்துறை

மேற்கூறியவற்றில் ஜனநாயகத்தின் வெற்றிக்கான முக்கிய இயல்புகளை குறிப்பிடும் விடையை தெரிக?
**1.BDE 2. ACE 3.ACD 4. ABD**

31. "சிங்கள ஜாதிய" என்ற பத்திரிகை யாரால் ஆரம்பிக்கப்பட்டது?
1.அநாகரிக தர்மபால 2. கோர்னஸ் ஸரிவ் ஒவ் கொட்
3.ஶ்ரீமத் டி.பி.ஜயதிலக்கா 4. பியதாஸ சிறிசேன

32. குசுமாசன தேவியை மணந்ததன் மூலம் மலையக இராட்சிய உரிமையைப் பெற்ற 1ம் விமலதர்மசூரியனின் ஆட்சிக்காலம்?
1.கி.பி 1658-1670 2. கி.பி 1592-1604 3. கி.பி 1687-17074. கி.பி 1739-1743

33. ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்களின் விலைமட்டங்களுக்கு ஏற்ப தீர்மானிக்கப் படுவது பின்வருவனவற்றில் எது?
1. வர்த்தக விகிதம் 2. வர்த்தக நிலுவை
3. நாணயமாற்று விகிதம் 4. சதவீத வருமானம்

34. A.இலங்கை ஒருங்கிணைந்த ஆட்சியின் கீழ் கொண்டு வரப்படல் வேண்டும்
B.பிரதேச வாரிப் பிரதிநிதித்துவ முறை விரிவாக்கப்பட்டமை
C.இராஜ காரிய முறை ஒழித்தல்
D.அரசுக் கழகம் நிறுவப்பட்டமை
E. சட்டவாக்ககழகம் சட்டநிர்வாகம் அமைக்கப்படல்.மேற்கூறிய சிபார்சுகளில் கோல்புறுக் ஆணைக்குழு சிபார்சுகள்
1.**ACD** 2. **ADE** 3. **BDE** 4. **ACE**

**கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள தரவுகளின் உதவியுடன் 35-40 வரையான வினாக்களுக்கு விடை தருக?**
**வருமானத்தின் அடிப்படையில் நாட்டை வகைப்படுத்துக.**

| நாடுகள் | எழுத்தறிவு வீதம | சிசு மரணம் (ஆயிரத்திற்கு) | சனத் தொகை வளர்ச்சி | ஒரு தொலைபேசிக்கு மக்கள் | நகர்ப்புற சனத் தொகை | ஒரு வைத்தியருக்கு மக்கள் | ஆயுள் எதிர்பார்ப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| E | 99.8% | 7 | 10% | 1.4 | 86% | 332 | 76 |
| B | 99.5% | 7 | 1.2% | 1.5 | 86% | 438 | 78 |
| C | 99.0% | 20 | 0.4% | 6.2 | 76% | 220 | 69 |
| D | 37.8% | 110 | 2.5% | 1212.0 | 14% | 9.523 | 52 |
| A | 31.6% | 164 | 1.9% | 390.0 | 19% | 7.692 | 44 |

35.மேலுள்ள அட்டவணையில் அவுஸ்திரேலியா,ரஷ்ய நாடுகளின் தரவுகளை ஒழுங்கு முறையில் குறிப்பிடுவது.
1. Aயும் Cயும் 2. Aயும் Bயும் 3. Bயும் Cயும் 4. Aயும் Dயும்

36. சுகாதார மருத்துவ சேவைகள் உயர் மட்டத்தில் காணப்படும் நாடு எது?
1. C 2. A 3. E 4. B

37. சனத்தொகை வளர்ச்சி வேகம் உயர்வாகக் காணப்படும் நாடு எது?
1. A 2. D 3.C 4. B

38. அபிவிருத்தி மட்டம் உயர்வாக உள்ள நாடு எது?
1. A 2. C 3. D 4. E

39. நகர்ப்புற சனத்தொகை மிக உயர்வாகக் காணப்படும் நாடுகளைக் குறிக்கும் எழுத்துக்கள்?
1. Aயும் Cயும் 2. Aயும் Dயும் 3. Bயும் Cயும் 4. Aயும் Bயும்

40. நகர்ப்புற சனத்தொகை அதிகமாக காணப்பட காரணம்?
1. சிசுமரண வீதம் 2. வேலைவாய்ப்பு காணப்படல்
3. ஆயுள் எதிர்பார்ப்பு 4. எழுத்தறிவு வீதம் உயர்வாகக் காணப்படல்

**திங்கள் சமூகக்கல்வியும் வரலாற்றுக்குமான பகுதி -I இன் விடையுடன், தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி-Iஇற்கான வினாக்களும் வெளிவரும்.**

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல: 9

## ஸ்தூபி நீராட்டு விழாச் சிறப்பு



உத்திராஞான சிதம்பரம் என்கின்ற வடலூரில் எக்காலத்திலும் எங்குமில்லாத பெரிய அளவில் அன்பர்களின் கூட்டம் திரண்டிருந்தது. சற்று ஏறக்குறைய 8லட்சம் ஜனங்கள் இருக்குமென்று கூறிக்கொண்டார்கள். 40லட்சம் ரூபாய்க்கு ரயில்வே டிக்கட்டு விற்றதென்று ரயில்வே அதிகாரிகள் கூறினார்கள். 22.04.1950 மாலை மாரியப்ப சுவாமிகளின் கச்சேரி நடந்து கொண்டிருக்கிறது. அப்பொழுது காவல்துறை மாவட்ட அதிகாரி என்னைத் தனியே அழைத்துக் கொண்டுபோய் "கும்பாபிஷேகம் செய்யப் போகிறீர்களா?" என்று கேட்டார். ஏன் அப்படிகேட்டார் என்றால் "ஹிந்து அறநிலைய ஆட்சித்துறையிலிருந்து கும்பாபிஷேகம் செய்யக்கூடாது. ஆனால் பொது ஜனங்களின் கருத்தை அனுசரிக்கவும்" என்று அவர்கள் அனுப்பிய உத்தரவிலிருந்தது.

காவல்துறை அதிகாரியைப் பார்த்து "கும்பாபிஷேக நிகழ்ச்சியைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது. நான் அன்னதானம் செய்து கொண்டிருக்கிறேன். இன்னிசையரங்குகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன" என்று பிடிகொடுக்காமல் பதில் சொன்னேன். அவர் "சமயத்துறையில் நாங்கள் தலையிட எங்களுக்கு அதிகாரம் இல்லை. ஆனால் கலகம் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினார். பிறகு நான் பிரசங்க மேடைக்குச் சென்றுவிட்டேன்.

23.04.1950 எம்.கே.தியாகராஜபகவதருடைய இன்னிசையரங்கு மிக உயர்வாக நடைபெற்றது.

23.04.1950 இரவு பாலாலயத்திலிருந்து அருட்பெருஞ்ஜோதி திருவிளக்கை முலாலயத்திற்கு என் கையினால் கொண்டுபோய் வைத்தேன். பெரிய கண்ணாடியையும் கொண்டுபோய் முலாலயஜோதிமேடையில் வைத்தேன்.

24.04.1950 காலை 9.00மணிக்கு ஓ.பி.ராமசாமி ரெட்டியாருடைய தலைமையில் ஞானசபை அர்ச்சகராகிய பாலசுப்பிரமணிய சிவாச்சாரியாரின் புதல்வர் சிற்சபேச சிவாச்சாரியர் ஸ்தூபிக்கு நீராட்டினார்.

அறங்காவலர்கள் கும்பாபிஷேகத்தை நிறுத்தவேண்டுமென்று இஞ்ஜங்ஷன் ஆர்டர் வாங்கிக்கொண்டு வந்தார்கள். காவல்துறையினர்கள் ஓ.பி.ராமசாமி ரெட்டியார் தங்கியிருக்கிற இடத்துக்குச் சென்றார்கள். இந்தக் கும்பாபிஷேகம் செய்யக்கூடாது என்ற உத்தரவைக் கண்டு ஓ.பி.ராமசாமி ரெட்டியார் ரௌத்ராகாரமாகச் சீறி "இது அரசாங்கமா?" தனிப்பட்ட ஒருவர் இத்துணைப் பெரிய மகா கைங்கரியம் செய்துகொண்டிருக்கிறார். அதற்கு உறுதுணையாக இருப்பதற்கு மாறாக கும்பாபிஷேகத்தை நிறுத்தி விடுவதா? இது மிகவும் அக்கிரமம். பேசாமல் போங்கள்" என்று சத்தமிட்டுச் சொன்னார். காவல்துறையினர்கள் செயல்பாடாமல் சும்மாயிருந்துவிட்டார்கள்.

இந்தத் தகவலை ரெட்டியார் அவர்கள் இரண்டு ஆண்டுகளுக்குப்பின் எனக்கு அறிவித்தார். கும்பாபிஷேகம் முடித்து நானும், ரெட்டியாரும் பிரசங்கமேடைக்கு வந்தோம். எனக்கு அறங்காவலர்கள் அனுப்பிய இரண்டு பதிவுத்தபால் வந்தது. மேடையிலமர்ந்து பிரித்துப் படித்தேன். கும்பாபிஷேகம் செய்யும் குற்றத்திற்கு என்மேல் வழக்குத் தொடுக்கப் போவதாக அதில் கண்டிருந்தது.

ஓ.பி.ராமசாமி ரெட்டியார் அதைப் படித்துவிட்டு "இதை நீங்கள் பொருட்படுத்த வேண்டாம்" என்று கூறினார். காலை 9 மணி முதல் மாலை 6மணிவரை நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன. கே.பி.சுந்தராம்பாள் இன்னிசைக் கச்சேரிக்கு வரவில்லை என்று தந்தி வந்தது. நான் இதுவும் ஒரு நன்மைக்கே என்று கருதி விழாவை அத்துடன் பூர்த்தி செய்து விட்டேன். மைக்கில் எல்லோருக்கும் நன்றிகூறி முடித்துவிட்டேன். பின்னர் நெடுந்தூரம் நடந்து போய் அற்பசங்கியை கழிக்கலானேன். சிறுநீர் நெடுநேரம் போய்க்கொண்டேயிருந்தது. ஏன் இவ்வளவு.சிறுநீர் கழிகிறது? என்று யோசித்தேன். முதல் நாள் மாலை சிறுநீர் கழித்தது தான் 24மணிநேரம் சரீரநினைவு இன்றி இருந்தேன் என்று இதனால் விளங்குகிறது. கண்ணப்ப நாயனாருடைய வரலாறும் எனக்கு நினைவிற்கு வந்தது.

கும்பாபிஷேகத்திற்கு வந்த ஜனங்கள் ரயில், பஸ், வண்டி முதலிய சாதனங்களில் திரும்பிப்போய்க்கொண்ருந்தார்கள். 9 ஆண்டுகளாகத் திருப்பணி செய்த தொழிலாளிகளுக்கு என் சொந்தச் செலவில் அவர்கள் மனம் மகிழுமாறு பரிசுகள் வழங்கினேன். 25.04.1950 மாலையுடன் சமயற்காரர்களை கணக்குத் தீர்த்து அனுப்பிவிட்டேன்.

26.04.1950 ஒரு 500 பரதேசிகள் தங்களுக்குச் சோறுபோடவேண்டுமென்று கூட்டம் போட்டு என்னை வைய்து கொண்டிருந்தார்கள். நான் சிரித்துக்கொண்டே அவர்களுக்கு ஆள் ஒன்றக்கு கால்படி அரிசி கொடுத்து அனுப்பினேன். எஞ்சியிருந்த சிறு திருப்பணிகளை மண்டலாபிஷே கத்திற்குள் முடிக்குமாறு 500 ரூபாய் காண்டிராக்ட் பேசி என்னுடைய அன்பர் பண்ருட்டிமுரு கேச நாயுடுவிடம் ஒப்படைத்தேன்.

அவர் அதன்படியே செய்து முடித்தார். இவ்வாறு வடலூர் கும்பாபிஷேக நிகழ்ச்சி இறைவன் திருவருளால் அடியேன் இட்ட திட்டப்படியே எல்லாம் இனிது நிறைவேறின. எண்ணில்லாத இடையூறுகள் வந்து அவைகளேல்லாம் பகலவன் முன்னால் பனி விலகுவது போல விலகின.

நேரிசை வெண்பா

**என்றும் மறவேன் இடர்பலவும் நீக்கியே**
**குன்று தனைப்பிளந்த கோமானேயூ- நன்று**
**வடலூர் திருப்பணியை மாண்புடனே செய்த**
**நடலூர் அருள்திறத்தை நான்**

சென்னைக்குச் சென்றபோது ஸ்தூபி நீராட்டு விழா மலர், ஞானசபைப் படம், திருநீற்றுப்பை இவைகளை எடுத்துக் கொண்டுபோய் இந்து அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் சின் னையா பிள்ளையிடம் கொடுத்து "வடலூர் திருப்பணிக்கு கும்பாபிஷேகத்திற்குத் தாங்கள் செய்த உதவிக்கு என்றும் நன்றி" என்று கூறினேன். அவர் நணத்துடன் "நான் ஒரு உதவியும் செய்யவில்லையே! இடையூறுதானே செய்தேன்!" என்று கூறினார்.

வடலூர் சத்திய ஞானசபைத் திருப்பணி வரவு செலவு அறிக்கைகளை 400 பக்கத்தில் அச்சிட்டு முக்கியமானவர்களுக்கு வழங்கினேன். ஒரு சமயம் சென்னை பூக்கடை மல்லீசுவரர் கோயிலில் நான் விரிவுரை செய்து கொண்டிருக்கும்பொழுது சின்னையாப்பிள்ளை அங்கு வந்தார். அவர் வாரியார் வடலூர் திருப்பணியை மிகவும் நேர்மையாக நடத்தி முடித்தார். 400 பக்கத்தில் வரவு, செலவு அறிக்கையை வெளியட்டிருக்கிறார். அந்தப் புத்தகத்தை அலுவலக மேஜையில் வைத்திருக்கிறேன். அது பற்றி குற்றம் குறை இதுவரை யாரும் கூறவில்லை. மானமுள்ள ஒவ்வொரு தமிழனும் இவ்வாறு செய்யவேண்டும்" என்று கூறினார்.

(தொடரும்)

# அரசாங்கத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஐ.தே.க.


அதிகரித்து வருகின்ற வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசஊழியர்களுக்கு உறுதியளித்தி ருக்கும் 70 சதவீத சம்பளவுயர்வு வழங்கப்படாததைக் கண்டித்தும் .தற்போதுள்ள அரசாங்கத்துக்கு எதிராக பொது மக்களை விழிப்பூட்டுவது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் அரசியல் குழுவினர் ஆராய்ந்துள்ளனர்.

இதற்கிணங்க எதிர்வரும் 24ம் திகதி கோட்டைத் தொடருந்து நிலை யத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்துவதற்கு அரசசேவை தொழிற்சங்க சம்மேளனத்தினர். ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியிடம் அலோசனை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளதாகவும். அதற்கு அந்தக் கட்சியின் அரசியல் குழு அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், இதுதொடர்பான பேச்சுவார்த்தை ஒன்று கொழும்பு மாநகர சபை அதிகாரிகளோடு நடைபெறவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-121)

# மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் கோரிக்கை



மிதிவெடிகள் அதிகமாகப் புதைக்கப்பட்டிருக்கும் யாழ். குடாநாட்டில் உள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்கு பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்து செயற்படுகின்றபோதும், அதற்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்காமல் இருப்பதால் மிதிவெடியகற்றும் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

மிதிவெடி அகற்றும் பிரதேசங்களையும், அப்பணிகளின்போது எதிர்நோக்கப்படும் சவால்களையும் நேற்றைய தினம் யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் குடாநாட்டுப் பத்திரிகையாளர்களை நேரில் அழைத்துச் சென்று களநிலைமைகளை விளக்கியது.

யாழ். குடாநாட்டில் மிதிவெடியகற்றும் நிறுவனங்கள் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கின்ற பிரதேசங்களை இனங்கண்டு மிதிவெடியகற்றப்பட்ட - அகற்றப்படவேண்டிய பிரதேசங்களை வெவ்வேறு நிறத்திலான குறியீட்டுப் பலகைகளின் மூலம் அடையாளப்படுத்தப்படுகின்றது.

எனினும் மேற்படி குறியீட்டுப் பலகை பல்வேறு தேவைகளுக்காகச் சூறையாடப்படுகின்றன. குறியீட்டுப் பலகைகள் சூறையாடப்படுவதால் மிதிவெடியற்றும் பணிகள் காலதாமதமாவதோடு, மிதிவெடி அகற்றிய அகற்றப்படாத பிரதேசங்களையும் இனம்காணமுடியாமல் உள்ளது.

அத்துடன் இக் குறியீட்டுப் பலகைகளைப் பிடுங்கி எடுத்துச் செல்பவர்களுக்கும் பாராதூரமான ஆபத்துக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு எனவே இவ்வாறான தீய செயற்பாடுகளில் மக்களை ஈடுபடவேண்டாம் என யாழ் மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம் கேட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளில் மக்கள் தொடர்ந்தும் ஈடுபடுவார்களானால் அப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள் அகற்றப்படாமலேயே விடப்படும். இதனால் பாதிக்கப்படுவது அப்பகுதி மக்களே .

ஆவரங்கால் பகுதியிலுள்ள மிதிவெடிகளை இராணுவத்தினர் அகற்றுவதற்கு முன்வந்து செயற்பட்டபோதும் இராணுவத்தினர் மிதிவெடி உள்ள பிரதேசங்களை இனங்கண்டு அதனை கயிறுகட்டி அடையாளப்படுத்தியபோது அக் கயிறுகளை அப்பகுதி மக்கள் கழற்றிச்சென்று விடுகின்றனர். இதனால் இராணுவத்தினர் அப்பகுதியில் மிதிவெடியகற்றும் பணியைக் கைவிட்டு தற்போது தம்புதோட்டப்பகுதியில் மிதிவெடியகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் மிதிவெடியகற்றும் பிரதேசங்களில் ஆடு, மாடுகளை கட்டுவதுடன் மலசலம் கழிக்கும் இடமாக அவற்றைப் பயன்படுத்துவதால் இவற்றை அறியாதோர் மிதிவெடியகற்றிய பிரதேசங்களில் வெடிபொருட்களை கொண்டுவந்து வீசிவிட்டு செல்கின்றனர்.

சுன்னாகம், புன்னாலைக்கட்டுவன் போன்ற இடங்களில் இச்செயற்பாடு தொடர்ந்தும் நடைபெற்றுவருகிறது.

இவ்வாறானவற்றால் மிதிவெடியகற்றும் பணியில் காலதாமதம் ஏற்படுகின்றது. இவ்வாறான செயற்பாடுகளில் மக்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவார்களானால் அப்பகுதியில் மிதிவெடியகற்றும் செயற்பாடு கைவிடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

வயல்களிலோ, வீட்டுக்காணியிலோ ஏதாவது வெடிபொருட்களை கண்டால் உடனடியாக அவ்விடயத்தை யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்துடன் தொடர்புகொண்டு அதற்கான விண்ணப்பத்தை பூர்த்திசெய்து சமர்ப்பித்தால் மூன்று நாட்களுக்குள் அவ வெடிபொருட்கள் அகற்றப்படும். எனவே மிதிவெடியகற்றும் செயற்பாடுகளுக்கு பொதுமக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்குவதுடன் மிதிவெடியகற்றுபவர்களுக்குத் தடங்கல் ஏற்படாமல் ஆதரவு வழங்கும் பட்சத்தில் மிதிவெடிகளை விரைவாக அகற்றமுடியும். (ற-19)

கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல் - குறள்

வலம்புரி

# இந்தியா போடும் முட்டுக்கட்டையை எரிக் சொல் உடைத்தெறிவாரா?

சமாதான முயற்சியில் இலங்கை மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டாலும், நோர்வே அரசு நம்பிக்கை இழக்கவில்லை என்பதை விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மின் இலங்கை விஜயம் உறுதி செய்கிறது.

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை என்பது பல சிக்கல்கள் நிறைந்தது. அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பது சுலபமானது அல்ல. கடின முயற்சியும், விட்டுக்கொடுப்புமே தேவையானதாகுமென முன்கூட்டியே தெரிவித்தவர் நோர்வேத் தூதுவர். அவ்வகையில் அவரின் முயற்சி தொடர்வதில் நியாயம் இருக்கவே செய்கிறது.

இவ்வாறு நோர்வேயின் முயற்சி தொடர்வதன் காரணமாகவே இலங்கையில் யுத்தநிறுத்தம் நீடிக்கின்றது என்ற உண்மையும் இங்கு உணரப்பட வேண்டியதொன்றாகும்.

இலங்கையின் சமாதான முயற்சியில் நோர்வே அரசு அக்கறைகாட்டத் தவறுமாயின் மீண்டும் யுத்தம் வெடிப்பது சர்வநிச்சயம். இருந்தும் இந்த உண்மையை இலங்கை அரசும், ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளும் உணர்வதாக இல்லை.

ஏதோ இலங்கை அமைதியாக இருந்த நாடு என்பதுபோலவும், நோர்வேயே சமாதானத்தைக் குழப்புவது போலவும் கருதுகின்ற இனவாதிகள் நோர்வேயின் சமாதான முயற்சிக்கு பெரும் குந்தம் விளைவித்து வருகின்றனர்.

ஒருதடவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேயின் சமாதான முயற்சி மீது ஆத்திரங் கொண்டு அந்நாட்டின் கண்காணிப்புக்குழுத் தலைவரை உடனடியாக வெளியேற்றுவித்த சம்பவமும் நடந்ததுண்டு. இவ்வாறு தனது மதிப்பை இழக்கின்ற சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோதிலும், மனித உயிர்களின் மகத்துவத்தை உணர்ந்த நாடென்ற வகையில் நோர்வே தனது சமாதான முயற்சியைக் கைவிடவில்லை.

குறிப்பாக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எப்பாடுபட்டேனும் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்திவிட வேண்டுமென்பதில் மிகத் தீவிரமாகவுள்ளார்.

எனினும், அவரின் முயற்சிக்கு தென்னிலங்கைப் பேரினவாதிகளின் எதிர்ப்பு மட்டுமன்றி இந்தியாவின் தடைக்கல்லும் பெரும் இடைஞ்சலாக இருப்பதை மறுப்பதற்கில்லை.

இலங்கையில் கடந்த 20 வருட காலமாக இனப்பிரச்சினை நீடித்துவந்தபோதிலும், அதனை முடிவுக்குக் கொண்டுவருவதில் இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்கவில்லை.

சிங்கள ஆட்சியாளர்களினால் ஈழத்தமிழர்கள் கொடுமைப்படுத்தப்பட்டபோது அதற்கு ஓர் தீர்க்கமான முடிவைக்கண்டு தமிழ்மக்களின் சுதந்திரமான வாழ்விற்கு வகைசெய்ய இந்தியா தவறியதன் காரணமாகவே சிறிய நாடான இலங்கையில் மிகப்பெரிய - நீண்டகால யுத்தம் நடந்தது.

இந்துமா சமுத்திரத்தை தனது வல்லாண்மைக்குள் வைத்திருக்க விரும்புகின்ற இந்தியாவுக்கு இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்ற எண்ணமில்லாமல் போனமைக்கு அந்த நாட்டின் சுயநலமே காரணமாகும்.

இந்தியா கட்டளையிட்டால் இலங்கை செய்து முடிக்கும் என்ற சூழ்நிலை இருந்தபோது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்குமாயின் இன்று இனப்பிரச்சினை இந்தளவு தூரம் புரையோடிப் போயிருக்க வாய்ப்பிருந்திராது.

தான்விட்ட தவறை தன்னளவில் உணராத இந்தியா இப்போது இலங்கையில் சமாதானம் ஏற்படுவதை விரும்பவில்லை. சமாதான முயற்சியை நோர்வே முன்னெடுக்கின்ற ஒவ்வொரு கட்டத்திலும் இலங்கைப் படைகளுக்கு உதவி செய்வதாக இந்தியா விடும் அறிவிப்பு இலங்கைப் படைகள் மூலம் சமாதானத்தைக் குழப்பும் நோக்கிலாகும்.

அவ்வகையில் இலங்கைக் கடற்படைக்கு உதவி செய்ய இந்தியக் கடற்படை தயாராக இருப்பதாக அந்நாட்டுக் கடற்படைத் தளபதி விடுத்த அறிவிப்பு எரிக் சொல்ஹெய்மின் சமாதான முயற்சிக்கு இந்தியா போட்ட மிகப்பெரிய முட்டுக்கட்டையாகும்.

# ஜே.வி.பியைத் தூக்கியெறிந்துவிட்டு பேச்சுக்களை ஆரம்பிப்பது அவசியம்

## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வலியுறுத்து

(கொழும்பு)

இருநூற்று இருபத்தைந்து பேர் அங்கம் வகிக்கும் நாடாளுமன்றத்தில் வெறும் 39 ஆசனங்களை மட்டுமே வைத்துள்ள ஜே.வி.பியின் கருத்துக்களுக்கும் அழுத்தங்களுக்கும் இடம்கொடுக்கும் அவசியம் எதுவும் இல்லை என்றும், ஏனைய பெரும்பான்மை ஆசனங்களின் ஆதரவைப் பெற்று, விடுதலைப் புலிகளுடன் உடனடியாக இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படியும் தாம் அரசைக் கோருவதாக இ.தொ.கா.அமைச்சர் முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் கையளித்துள்ள இடைக்கால நிர்வாகத் திட்டத்தின் கீழ் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டால் மட்டுமே தமது ஆதரவைத் தரமுடியும் என அரசுக்குக் கூறியுள்ளதாகத் தெரிவித்த முத்து சிவலிங்கம், ஜனாதிபதி சந்திரிகா நினைத்தால் ஜே.வி.பியையும் இதற்கு இணங்க வைக்கமுடியும் என்றும் கருத்துக் கூறியுள்ளார்.

முதல்முறையாக இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளைத் தொடர இரு பிரதான கட்சிகளும் விருப்பம் தெரிவித்துள்ளன.

எனவே ஜே.வி.பி. தொடர்ந்தும் எதிர்ப்பைப் பிரயோகித்தால், அதைப் புறக்கணித்து, ஏனைய அனைத்துக் கட்சிகளினதும் ஆதரவுடன் பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதி உடனடியாக முன்னெடுப்பது தற்போதைய அவசியதேவை என்றும் அவர் தெரிவித்தார்.

இ.தொ.காவின் பிரதித்தலைவர் ஆர்.யோகராஜன் கருத்துக் கூறுகையில், தற்செயலாக ஜனாதிபதி சந்திரிகா, ஜே.வி.பியின் எதிர்ப்பைப் பொருட்படுத்தாது பேச்சுக்களை இடைக்கால நிர்வாக அலகின்கீழ் ஆரம்பித்தால், ஜே.வி.பியினால் என்ன செய்யமுடியும் என்பது பெரிய கேள்விக்குறியே என்று தெரிவித்தார். (ற)

# உலகெங்கிலும் தமிழரின் புகழ் பரவ தேசியத் தலைவரின் மதிநுட்பமே காரணம்

## தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(இத்தாலி)

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மதிநுட்பத்தால் தமிழனின் புகழ் இன்று உலகம் முழுவதும் பரவி வியப்புற்று நிற்கின்றது என, தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தெரிவித்துள்ளார்.



இத்தாலியில் தமிழீழத் தேசிய மாவீர்கள் நினைவாக நடைபெற்ற கால்பந்தாட்டப் போட்டி நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில், தாயகத்தில் சர்வதேசரீதியில மிளிரக்கூடிய அதிசிறந்த வீரர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் வெகுவிரைவில் விளையாட்டுத்துறையின் ஊடாக தமிழர்களின் புகழை உலகறியச் செய்வார்கள்.

சர்வதேசத் தரத்திற்கு அவர்களை ஊக்குவிக்கும் பணியில் தமிழீழ விளையாட்டுத்துறை செயற்பட்டு வருகிறது எனத் தெரிவித்தார்.

தமிழீழத் தேசிய மாவீரர்கள் நினைவாக ஆண்டுதோறும் தமிழீழ விடுதலைப் புலிகளின் இத்தாலிப் பணியகத்தினால் நடாத்தப்பட்டுவரும் கால்பந்தாட்ட வெற்றிக் கிண்ண பத்தாவது ஆண்டுப் போட்டிகள் இத்தாலி வலர்மோ நகரில் கடந்த 12 ஆம் திகதி மிகவும் சிறப்பாக நடைபெற்றமை குறிப்பிடததக்கது.

(ற-121)

# அப்துல் காதருக்கு 29 வரை விளக்கமறியல்

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினருமான அப்துல் காதரை எதிர்வரும் 29ம் திகதிவரை விளக்க மறியலில்வைக்குமாறு கொழும்பு மாவட்ட மேலதிக நீதிவான் களுவராய்ச்சி உத்தரவிட்டுள்ளார்.

மோசடிக் குற்றச்சாட்டின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அப்துல் காதரை நேற்று முன்தினம் நீதிமன்றில் ஆஜர்செய்தபோதே நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

அப்துல் காதர் தொடர்பான விசாரனைகளை இரு வாரங்களுக்குள் முடிக்கமுடியும் என்று வழக்கில் ஆஜராகி பொலிஸ் தலமையக குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி றூவான் குணசேகர நீதிமன்றில் தெரிவித்தார்.

வழக்கு விசாரணை முடிவடைந்த பின்னர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-8)

# ஹொலிவூட் புத்தா திரைப்படம் குறித்த சர்ச்சை தொடர்கிறது

பௌத்த மதத்தில் பெரும்சர்ச்சையைக் கிளப்பியுள்ள அமெரிக்காவின் ஹொலிவூட் புத்தா எனும் திரைப்படம் பௌத்த சமய தேரர்களை பாதித்துள்ளதாக தேசிய பிக்குகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

புத்தரின் உருவத்தின் மேல் குறிப்பிட்ட படத்தின் தயாரிப்பாளார் அமர்ந்திருப்பதைப்போல் சுவரொட்டி வெளியா



"ஹொலிவூட் புத்தா" திரைப்படத்தை தடைசெய்யக்கோரி அமெரிக்கத் தூதுரகம் முன்னால் பௌத்த பிக்குகள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோது...

னதையடுத்தே இந்தச் சர்ச்சை எழுந்துள்ளமை குறிப்பிடதக்கது.

இந்தச் திரைப்படம் அமெரிக்க லொஸ்ஏஞ்சல் நகரில் எதிர்வரும் 23 ஆம் திகதி திரையிடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து தேசிய பிக்குகள் சம்மேளனம் பௌத்த விவகார அமைச்சிடம் இந்தத் திரைப்படம் திரையிடப்படுவதை தடுத்துநிறுத்துமாறு அமெரிக்க அரசை வலியுறுத்தும்படி கோரியிருந்தது.

இந்தத் திரைப்படம் தொடர்பாக அமெரிக்கச் சட்ட திட்டங்களுக்கு அமைவாக தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தில் தம்மால் தலையிடமுடியாது என்றும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் சர்சசைக்குரிய இத்திரைப்படத்தின் சுவரொட்டியை படத் தயாரிப்பாளர் அகற்றியமை தொடர்பாக அமெரிக்கத் தூதுவராலயம் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளதுடன், தாம் பௌத்த மதம் உட்பட சகல மதங்களையும் ஒரேவிதமாகப் பேணுவதாகவும் தூதரக அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். (க-8)

# வரட்சி நிவாரணப் பணிகளுக்கு அமெரிக்காவும் நிதி வழங்கும்

(கொழும்பு)

நாட்டில் நிலவிவரும் வரட்சி காரணமாக அல்லலுறும் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கும் வகையில் அமெரிக்க அரசாங்கம் ஒருஇலட்சம் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கமுன்வந்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த நன்கொடையானது அமெரிக்க உதவி நிறுவனத்தின் ஊடாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

இவ்வாறு கையளிக்கப்படவுள்ள இந்நிதி உதவிமூலம் 12 ஆயிரம் குடும்பங்கள் குடிநீரைப் பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் இந்நிதியின் மூலம் புத்தளம், அநுராதபுரம் மற்றும் குருநாகல் மாவட்டங்களில் அதிகளவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீரைச் சேமித்துவைப்பதற்கான உபகரணங்களையும் இரண்டு மாதத்திற்குரிய குடிநீரையும் வழங்கத் திட்ட மிட்டுள்ளது. (க-121)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

என்னைப் பற்றி ஒருவன் "இவர் பெரிய அறிவாளி" என்று நினைக்கிறான். இன்னொருவன் "இவர் ஒரு முட்டாள்" என்று எண்ணுகிறான். எதுவும் தெரியாமலே இந்தச் சீரழிவு, இந்த அடிமைத்தனம் இருட்டறையில் நாம் தலையோடு தலை மோதிக்கொள்கிறோம். இவை எல்லாவற்றையும் தடுப்பதற்கான சக்தியைத் தருவது தான் தியானம்.

சுவாமி விவேகானந்தர்

# வட - கிழக்கு மனிதவுரிமை அமைப்புடன் பௌத்த குருமார் கிளிநொச்சியில் சந்திப்பு

வடக்கிற்கான சமாதானப் பயணத்தை மேற்கொண்டுள்ள பௌத்த மதகுருமார் நேற்று கிளிநொச்சியில், மனிதஉரிமைகள் அமைப்பின் தலைவர் வணக்கத்திற்குரிய கருணாரட்ணம் அடிகளாருடன் கலந்துரையாடினர்.

இக்கலந்துரையாடலின் பின் வன்னியில் பல்வேறு பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களையும் சந்தித்தனர்.

பதுளை மாவட்டத்திலிருந்து வண. பிதா டிலக்ஸ் சாந்த பெர்ணாண்டோ என்ற கிறிஸ்தவ மதகுரு தலைமையில் 46 பௌத்த பிக்குகள் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தனர். கியூடெக் நிறுவனத்தின் உதவியுடன் இவர்கள் யாழ்ப்பாண குடாநாட்டிலுள்ள உயர்பாதுகாப்பு வலயப் பகுதிகளைச் சென்று பார்வையிட்டனர்.

தென்னிலங்கையில் ஒரு சில இனவாத பௌத்த பிக்குகள் சமாதானத்துக்கு எதிராகக் கூக்குரலிடுகிறார்கள். அவர்களை தாம் கவனத்தில் கொள்வதில்லை. தமிழ் மக்களும் அவர்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளக்கூடாது.

இது, அவர்களுக்கு ஏற்பட்டுள்ள ஓர் அரசியல் தேவை. அவர்கள் மதத்துடன் அரசியலை இணைத்துப் பார்க்கிறார்கள். இந்த நோயை மாற்ற தாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும், குறிப்பிட்டுள்ளனர். ஆனால், தாம் அவர்களைப் போன்றவர்கள் அல்லர். தாம் முழுமையான சமாதானத்தை விரும்புகின்றவர்கள். தமிழ் மக்களுக்கு ஒரு நிலையான தீர்வுகிடைப்பதையே தாம் விரும்புவதாகவும், அதனையே சிங்கள மக்களும் விரும்புகிறார்கள் எனவும் தெரிவித்தனர். இந்த மண்ணில் அமைதி ஏற்பட தாம் தம்மாலான அனைத்து உதவிகளையும் வழங்க உறுதி பூண்டுள்ளதாகவும் பௌத்த பிக்குகள் வலியுறுத்திக் கூறியுள்ளனர். (ச)


யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய

## பவளவிழா நடைபவனி

**காலம்: 21.09.2004 செவ்வாய்க்கிழமை காலை 8 மணி**

**பிரதம அதிதி: பேராசிரியர் கலாநிதி சு.மோகனதாஸ்**

**(துணைவேந்தர் யாழ். பல்கலைக் கழகம்)**

இப்பவனியில் வித்தியாலயப் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரும் பங்குகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.**

(C/522)



## யாழ்ப்பாணம் - மாநகரசபை

### வீதியோர வாகனங்களுக்கான வரி அறவீட்டை குத்தகைக்கு வழங்குவதற்கான

### கேள்வி அறிவித்தல் - 2004

பின்வரும் இடங்களில் தரித்து நிற்கும் வாகனங்களுக்கான வரி அறவிடுதலை 01.10.2004 தொடக்கம் 31.12.2004 வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

- **பருத்தித்துறை வீதி தொடக்கம் கே.கே.எஸ் வீதி வரையான ஆஸ்பத்திரி வீதி**
- **நாவலர் வீதி தொடக்கம் ஆஸ்பத்திரிவீதி வரையான கஸ்தூரியார் வீதி**
- **ஆரியகுளம் தொடக்கம் கே.கே.எஸ்வீதி வரையான ஸ்ரான்லி, பொன்னாலை வீதி**
- **புதிய தபால்நிலையச் சந்தி தொடக்கம் கே.கே.எஸ் வீதி மின்சாரநிலையச் சந்தி வரையான கே.கே.எஸ் வீதி**
- **மின்சாரநிலைய வீதி**

ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற்வரி நீங்கலாக) **150000/=**

இத்தொகைக்குக் குறைவான தொகை கோரும் கேள்விக்காரரது கேள்வி இரத்துச் செய்யப்படும்.

பிணைப்பணம் மீளளிக்கப்படமாட்டாது.

மீளளிக்கமுடியாத கேள்விப் பத்திரக்கட்டணம் **500/=**
வற்வரி **75/=**
மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் **3000/=**

கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி -
23.09.2004 வியாழக்கிழமை பி.ப 3 மணிவரை
கேள்விகள் சமர்ப்பிக்கவேண்டிய இறுதித் திகதி -
24.09.2004 வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் நேரம் -
24.09.2004 வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணி

**கலாநிதி க.குணராசா**
**மாநகர ஆணையாளர்**
**யாழ்ப்பாணம்**

**திகதி :13.04.2004**

(C/523)


## நவம்பர் மாதம்...

91 அலகிலிருந்து 180 அலகுகள் வரை பாவிப்பவர்களுக்கு இதுவரை ஒரு அலகிற்கு அறவிடப்பட்டுவந்த கட்டணமான 10ரூபா 60 சதம், 11 ரூபா 40 சதமாகவும்; 181 அலகுக்கு மேல் பாவிக்கப்படும் ஒவ்வொரு அலகுக்கும் இதுவரை அறவிடப்பட்டுவந்த 15 ரூபா 80 சதம் 16 ரூபா 40 சதமாகவும் அதிகரிக்கப்படவிருப்பதாக மின்சார சபை அறிவித்துள்ளது. (ம)

## குமுதினி...

நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடு மேற்கொள்ளப்பட்ட பின்னர் நெடுந்தீவைச் சென்றடைந்தது.

நாளொன்றுக்கு நான்கு சேவைகள் வீதம் பயணிகள் படகுச் சேவை இடம்பெறவுள்ளது.

குமுதினிப் படகானது காலை 7.30 மணிக்கு நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவானை நோக்கிப் புறப்பட்டு மீண்டும் காலை 10.30 மணிக்கு நெடுந்தீவுக்கு புறப்படும். பின்னர் பிற்பகல் 1.30 மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு குறிகாட்டுவானை வந்தடையும். இறுதிச் சேவையாக 3.30 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவு நோக்கிப்புறப்படும். (ச)

## அஷ்ரப்....

லிம் காங்கிரஸ், அஷ்ரப் காங்கிரஸ் உட்பட முஸ்லிம் அரசியல் கட்சிகளும், அமைப்புகளும் கிழக்கு மாகாணத்தில் இது தொடர்பாக நேற்றுப் பல்வேறு வைபவங்களை ஏற்பாடு செய்திருந்தன.

கிழக்கு மாகாண முஸ்லிம் பிரதேசங்களில் அனுஷ்டிக்கப்பட்ட துக்கதினம் காரணமாக அப்பிரதேசங்களின் வழமைநிலை பாதிக்கப்பட்டிருந்தது. பாடசாலைகள், அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் எதுவும் இயங்கவில்லை. வீதிகளில் வாகனப் போக்குவரத்து இன்மையால் உள்ளூர், வெளியூர் போக்குவரத்துச் சேவைகளும் பாதிக்கப்பட்டன. வியாபார நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு கொடிகள் பறக்கவிடப்பட்டன. பள்ளிவாசல்களில் விசேட பிரார்த்தனைகள் நடைபெற்று கத்முல் குர்ஆன் ஓதப்பட்டது. (ச)

## சமாதானப்...

லின் கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் விடுதலைப் புலிகள் கூடிய கவனம் செலுத்தி வருகின்றனர். ஆனால் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதில் கடும்போக்கை விடாப்பிடி நிலையைக் கடைப்பிடித்துவருகின்றனர்.

ஏ-9 பாதை திறப்புப் போன்ற முக்கியத்துவம்வாய்ந்த விடயங்களுக்கு தற்போதைய அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கியிருந்தது. அது குறித்து எந்தவித ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை. ஏ-9 பாதையை அதிகளவு நேரம் போக்குவரத்துக்குத் திறப்பதற்கு மனிதாபிமான அடிப்படையில் கோரிக்கை விடப்பட்டிருக்கிறது.

ஆனால், விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டில் இறுக்கமான போக்கைக் கடைப்பிடிப்பதன்மூலம அவர்களே சமாதான முயற்சி தாமதமடையக் காரணமாக இருக்கின்றார்கள். அரசாங்கம் எவ்வளவோ விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டுவிட்டது. தமது நிலைப்பாட்டில் தளர்வுப்போக்கைக் கடைப்பிடித்து சமாதானப் பேச்சு மேசைக்கு உடனடியாக வரவேண்டும்.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு எந்தவித அழுத்தமும் அரசின் மீது பிரயோகிக்கவேண்டிய அவசியமில்லை. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க காட்டமான தொனியில் விடுதலைப் புலிகள் மீது குற்றஞ்சாட்டியதாகத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய சந்திப்பில் ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், சமாதான செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபால மற்றும் நோர்வேத் தூதரக அதிகாரிகளும் கலந்துகொண்டனர். (த)

## அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழகத்தில் உடற் கல்வித்துறையில் தற்போது கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களையும் கல்வி கற்று வெளியேறிய மாணவர்களையும் இன்று காலை 9.30 மணிக்கு ஒன்று கூடுமாறு உடற் கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் அறிவித்துள்ளார்.

நியமனம் வழங்குவது தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் சம்பந்தப்பட்டவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

## அமெரிக்கக்குழு...

அவர்களது விஜயத்தின் நோக்கமென அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது. (ச)

## சமாதான...

நவம்பர் மாதம் 3 ஆம் திகதி வரை நடைபெற்றது.

மூன்றாம் சுற்றுப் பேச்சுக்கள் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் ரடிசன்சாஸ் பிளாஸாவில் டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை நடைபெற்று இருதரப்பினராலும் ஒஸ்லோ பிரகடனம் வெளியிடப்பட்டது.

நான்காம் சுற்றுப்பேச்சுக்கள் 2003 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி முதல் 9 ஆம் தி[illegible] வரை தாய்லாந்தில் இடம்[illegible]றது.

ஐந்தாம் சுற்றுப்பேச்சுக்கள் ஜேர்மனியிலுள்ள நோர்வேத் தூதரகத்தில் 2003 ஆம் ஆண்டு பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் 8ஆம் திகதிவரை நடைபெற்றது.

6 ஆம் சுற்றுப்பேச்சுக்கள் 2003 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை ஜப்பானில் நடைபெற்றது. (ம)

# யுத்தம் தொடர்ந்து...

உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன.

இக் காலப் பகுதியில் யுத்தம் தொடர்ந்தும் நடைபெற்றிருக்குமாயிருந்தால் இத்தொகை பத்தாயிரத்தில் இருந்து இருபதினாயிரமாக இருந்திருக்கும் என்பதை இங்கு அனைவருக்கும் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை விரும்பாத மக்கள் சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும், அதன் பிரதி பலன்கள் தமக்குக் கிட்ட வேண்டும் என்றும் விரும்புகிறார்கள் என்பதை என்னால் நன்கு உணர்ந்துகொள்ளமுடிகிறது.

இந்நிலையில் சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால், அரசும், தமிழீழ விடுதலைப் புலிகளும் காத்திரமான நகர்வுகளை மேற்கொள்ளவேண்டும். தற்போ[illegible] நிலவுகின்ற உட்பூசல்கள் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளபோதும், அரசும், விடுதலைப் புலிகளும் யுத்தநிறுத்த உடன்படிக்கையைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்வதாகவும் எரிக் சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# ஆயுதக் குழுக்கள்....

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நேற்றுப் பகல் 11 மணிக்கு இடம்பெற்ற சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் சார்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், காவல்துறைப் பொறுப்பாளர் ப. நடேசனும், நோர்வேயின் சார்பில் எரிக் சொல்ஹெய்முடன், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கரும், தூதரகத்தின் இரண்டாவது செயலாளரும் கலந்துகொண்டனர்.

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்முடன் பேச்சுவார்த்தை நடத்திய பின், ஊடகவியலாளர்கள் மத்தியில் தமிழ்ச்செல்வன் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்குக் கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் இராணுவத்தினருடன் இணைந்து செயற்பட்டுவரும் பல ஆயுதக் குழுக்களினால் யுத்த நிறுத்தத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதுடன், சமாதான முயற்சிகளையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. நாம் இதனை நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவரிடம் தெரிவித்துள்ளோம்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டுமானால் விடுதலைப் புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையிலேயே ஆரம்பிக்கப்படவேண்டும். அத்துடன் இடைக்கால தன்னாட்சி அதிகார சபையும் அவசியம் நிறுவப்படவேண்டும்.

எம்மால் தயாரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை வரைபு சர்வதேச சட்டவல்லுனர்களின் உதவியுடனேயே வரையப்பட்டதொன்றாகும். இந்நிலையில் அதனை மீண்டும் பரிசீலனை செய்யவேண்டிய நிலையில் நாம் இல்லை.

எனவே, விடுதலைப் புலிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை சம்பந்தமாக நாம் ஒரே குரலில் பேசிவருகின்றோம். ஆனால், அரசும், அதன் தலைவர்களும் நேரத்துக்கு நேரம் மாறுபட்ட கருத்துக்களைக் கூறிவருகின்றனர்.

இந்நிலையில் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அரசிடமிருந்து எந்தவிதமான ஆக்கபூர்வமான பதிலையும் கொண்டுவரவில்லை. எம்முடனான சந்திப்பை அடுத்தே அவர்கள் அரச தரப்பை சந்திக்கவுள்ளனர். இச்சந்திப்புக்களின் பின்பே அரசின் நிலைப்பாடு எமக்குத் தெரியவரும் என்று சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். (ம)


## மரண அறிவித்தல்

### திருமதி மார்க்கண்டு இராசமணி

சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு இராசமணி நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், ருக்மணி, மனோன்மணி, சந்திரலீலா ஆகியோரின் அன்புத் தாயாரும், பொன்னையா, கனகலிங்கம், தங்கராசா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக விளாவெளி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கீரிமலை வீதி,**
**சித்தன்கேணி**

**தகவல்**
**பேர்த்தி**

(C/524)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.